பக்கங்கள்: 14

காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 10 வெள்ளிக்கிழமை 27.10.2023 கதிர் 350

### வங்கிக் கணக்குகள் இல்லாததால்

# ஒன்றரை லட்சம் பேருக்கு அஸ்வெசுமா கிட்டவில்லை

## டிசெம்பர் மாதத்துக்குள் பெறவேண்டும்

அரசின் உதவித் திட்டமான அஸ்வெசுமா நலத் தொகையைப் பெறத் தகுதியுள்ள 1 லட்சத்து 56 ஆயிரம் பேருக்கு அந்த உதவிகள் இன்னும் வழங்கப்படவில்லை. அவர்களிடம் வங்கிக் கணக்குகள் இல்லாதமையே அதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

இலங்கையின் வறுமை ஒழிப்புத் திட்டமான அஸ்வெசுமா, ஏழைகள் மற்றும் நலிவடைந்தவர்களை இலக்காகக் கொண்டு, ஜுலை மாதம் முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாதமும் உதவித்தொகை வங்கிக்கணக்கினூடாக அவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதுடன் அதற்காக பயனாளிகளை வங்கிக்கணக்குகளைத் திறக்குமாறும் கேட்கப்பட்டது.

ஆனால் ஒன்றரை லட்சம் மக்களுக்கு வங்கிக் கணக்குகள் இல்லாத காரணத்தினால் பயனாளிகளுக்கு நேரடியாகப் பணம் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை நலன்புரி நன்மைகள் சபையின் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

ஐபோன்-15 இன்று இலங்கையில் உத்தியோகபூர்வமாக விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றது. நாட்டுக்குள் ஐபோன்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்ட ஒரே நிறுவனமான ஜிநெக்ஸ்ட் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக மொபைல் போன்களை இறக்குமதி செய்வதற்குக் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த நிலையில் ஐ போன் உட்பட அனைத்துப் போன்களும் இறக்குமதி செய்யப்படுவது வீழ்ச்சியடைந்திருந்தது. சந்தையில் போன்களைப் பெறுவதே சிரமம் என்கிற நிலையில் இருந்தது.

இப்போது இறக்குமதிக் கட்டுப்பாடுகளில் தளர்வுகள் வரத் தொடங்கியுள்ளதை அடுத்தே ஐ போன் - 15 இன்று அறிமுகப்படுத்தப்படுகின்றது. இந்த நிகழ்வில் இலங்கையில் பல பிரபலங்கள் கலந்து ☞ 2

## தீ விபத்து



யாழ். நகரில் காங்கேசன்துறை வீதியில் உள்ள கடையொன்றில் நேற்றிரவு தீ விபத்து ஏற்பட்டது.

கோயில் சிலைகள் பித்தளை உபகரணங்கள் விற்பனை செய்யும் கடையிலேயே விபத்து நிகழ்ந்தது. இதனால் அப்பகுதியில் சில ☞ 2

# ஜனாதிபதி மாளிகையை பார்வையிட்டார் டக்ளஸ்





காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று நேரில் பார்வையிட்டார்.

இந்த ஜனாதிபதி மாளிகையானது ☞ 2

## தீவக மக்களின் போக்குவரத்துக்கு அரச படகுகள் எவையுமே இல்லை

### அரச பணியாளர்கள் உட்பட மக்களுக்கு நெருக்கடி

(ந.லோகதயாளன்.)

யாழ். குடாநாட்டில் தீவுப்பகுதிகளிற்குப்போக்குவரத்துச் செய்ய அரச படகுகள் எவையு இல்லாததால் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். இது தொடர்பில் உடன் மாற்று ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணம் ☞ 2

# கீரிமலை ஜனாதிபதி மாளிகையை நகர அபிவிருத்தி சபைக்கு வழங்க யாழ். ஒருங்கிணைப்புக் குழு மறுப்பு

(நடராசா லோகதயாளன்.)

யாழ்ப்பாணம் கீரிமலையில் உள்ள ஜனாதபதி மாளிகை அமைந்துள்ள பிரதேசத்தினை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கும்தீர்மானத்திற்கு ஒப்புதல்அளிக்கமுடியாது என தமிழ் அரசுக் கடசியின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத்தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சாள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றபோதே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய பணிகளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியுடன் நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி செயலகத்தினால் ஆலோசணை முன்வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து நகர அபிவிருத்தி அதிகார சபையின் 8 பணிகளிறகான முன் அனுமதி கோரப்பட்டது. இதன்போது கீரிமலை ஜனாதபதி மாளிகை அமைந்துள்ள பிரதேசத்தினை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கும் தீர்மானத்திற்கும் ஒப்புதல் அளிக்குமாறு கோரப்பட்டது.

இதுதொடர்பில் மாவட்ட ஒருங்கி ☞ 8

### எம் வாழ்வாதாரத்தை பாதிக்கும்

## சிகை அலங்கரிப்பு நிலையங்களை இராணுவம் நடத்துவதைத் தடுங்கள்

### மாவட்ட கூட்டுறவுச் சங்கம் வலியுறுத்து

(ந.லோகதயாளன்.)

யாழ்ப்பாணம்மாவட்டத்தில்நவிண்டில்மற்றும் செம்பியன்பற்றுபகுதியில் இராணுவ முகாமில் படையினர் நடாத்தும் சிகைஅலங்கரிப்புநிலையங்களை தடை செய்து எமதுவாழ்வாதாரத்திற்கு உதவுங்கள் என யாழ். மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் ☞ 2

# எரி வாயு சிலிண்டர்கள் திருடிய இருவர் கைது

### யாழ். நகரில் சம்பவம்

(ந.லோகதயாளன்.)

யாழ்ப்பாண நகரில் கடந்த சில நாட்களாக நூதனமான முறையில் கடைகள் மற்றும் வீடுகளில் எரிவாயு சிலிண்டர்கள்திருடியஇருவரைத் தாம்கைதுசெய்துள்ளனர் என்று யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புபொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரிடமிருந்தும் 10 ற்கும் மேற்பட்ட எரிவாயு சிலிண்டர்கள் மீட்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம்பொலிஸ்நிலைய குற்றதடுப்பு பொலிஸ் பிரிவினர்தெரிவித்தனர்.

கைது ☞ 2

## சீன ஆய்வுக் கப்பலான ஷி யான்ஐ பார்வையிட 2 நாள்கள் சந்தர்ப்பம்

சீன ஆய்வுக்கப்பலான ஷி யான்- 6 ஐ பார்வையிடுவதற்கு இலங்கை மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகஅதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

கொழும்பின் எஸ். ஜே.ரி. துறைமுகமுனையத்தில் தரித்துள்ள குறித்த கப்பலானது, 2020ஆம் ஆண்டு தயாரிப்புபணிகள்பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் சர்வதேச சமுத்திர அமைப்பில் ஆய்வுக் கப்பலாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலில் கடலின் ஆழத்தினை அவதானிக்கக் கூடிய வசதிகளும், சேகரிக்கப்படும் கடலின் மாதிரிகளை ஆய்வு செய்யக் கூடியவாறான ஆய்வகமும் காணப்படுகின்றது.

அத்துடன் இக் கப்பலில் 260தொன் எடையுடைய ☞ 2

## கொழும்பு நகரத்தில் 5 வீட்டு திட்டங்கள்

### சீன அரசின் உதவியுடன்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கசீனஅரசுடன் செய்துகொண்டுள்ள இணக்கப்பாட்டிற்கு அமைவாக சிறு மற்றும் மத்தியத்தரமக்களுக்காக கொழும்பு நகரத்தில் 5 வீட்டுத்திட்டங்கள் தொடங்கப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோதெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்

இலங்கைஇயற்கை அம்சங்களுடன் கூடிய, காலநிலை வலயங்கள், இயற்கை வளம் என்பவற்றை ☞ 2

## பொருளாதார ஒப்பந்தங்களுக்காக வெளிநாடுகளுடன் தொடர் பேச்சு

### ஜனாதிபதி செயலக வர்த்தக பணியகம் முன்னெடுப்பு

அமைச்சரவை அனுமதியுடன் ஜனாதிபதி செயலகத்தின் கீழ் நிறுவப்பட்டிருக்கும் சர்வதேச வர்த்தக அலுவல்கள் பணியகத்தினால் வெளிநாடுகளுடனான வர்த்தக பொருளாதார ஒப்பந்தங்கள் தொடர்பிலும் பேச்சு முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

தேசியவர்த்தகபேச்சு குழுவான ஹிவுஹிஊ இன் வழிநடத்தலுடன் நிதி அமைச்சு, ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கொள்ளவுள்ளனர் என்று ஜிநெக்ஸ்ட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஜீவ் குணரத்னே தெரிவித்தார்.

ஐ போன் மற்றும் அதனோடு சேர்ந்த பொருட்களின் மீதான காதலர்கள் இன்று முதல் கொள்வனவுக்குத் தயாராகலாம்.

................

சீனாவின் உளவுக் கப்பல் எனப்படும் ஷி யான் - 6 கடல் ஆய்வுக் கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்குள் நுழைந்து தரித்து இன்றோடு இரண்டு நாட்களாகின்றபோதும் அதனைச் சுற்றிய சர்ச்சைகள் இன்னும் முடிந்தபாடில்லை. மூன்று நாட்கள், அதாவது இன்றும் நாளையும் கப்பல் கொழும்பில் தரித்து நிற்கும்போது அதனைப் பார்வையிட முடியும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. கப்பலை வரவேற்கும் நிகழ்வு சீனத் தூரகத்தின் அழைப்பின் பேரில் நேற்று இடம்பெற்றது.

இருப்பினும் இந்தக் கப்பல் இலங்கையைச் சுற்றிய கடலில் நாரா எனப்படும் இலங்கையின் கடல்வள ஆய்வுநிலையத்தின் பங்களிப்போடு ஆய்வுகளை மேற்கொள்வதற்காக வந்திருப்பதாகத்தான் செய்திகள் வெளியாகின. இப்போதும் அப்படித்தான் செய்திகள் வெளியாகின்றன. ஆனால், அந்தக் கப்பல் தனக்குத் தேவையான உணவு, எரிபொருள் ஆகியவற்றை ஏற்றுவதற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அது இலங்கையைச் சுற்றியுள்ள கடலில் ஆய்வுகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படவில்லை என்றும் அயலுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் கபில பொன்சேகா தெரிவித்தார் என்று ஏபி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பல் கடல்சார் அளவீட்டுப் பணிகளில் ஈடுபடும் வல்லமையக் கொண்டுள்ளது. ஆனால், சீன அரசு இந்தக் கப்பலை கடல் சார் அளவீட்டுக்கு மட்டுமின்றி கடல் படுக்கை சார் அளவீடுகளை மேற்கொள்ளவும் பயன்படுத்துகின்றது என்று கூறப்படுகின்றது. அதாவது இந்தோ-பசுபிக் கடலில் எதிர்காலத்தில் சீனக் கடற்படையினர் தமது நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கு வசதியாகவும், தமது கடற்படைக் கப்பல்கள் பயணிப்பதற்கான பாதைகளை வகுப்பதற்காகவும், குறிப்பாக நீர்மூழ்கிகளின் பயணப் பாதைகளை வகுப்பதற்காகவும் இந்த ஆய்வுக் கப்பல் பயன்படுத்தப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில் மூன்று நாள்கள் முடிந்ததும் இந்தக் கப்பல் எங்கு செல்லும் என்ன செய்யும் என்பது இப்போதைக்கு மர்மமாகவே உள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஒன்றரை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் ஜயந்த விஜேரத்ன தெரிவித்தார்.

விஜேரத்னவின் கூற்றுப்படி, ஜூலை மாதக் கொடுப்பனவு 12 லட்சத்து 30 ஆயிரத்து 97 குடும்பங்களுக்கு 5 நன்மை தவணைகளின் கீழ் செலுத்தப்பட்டது, மேலும் ஜூலைமாதத்தில் செலுத்தப்படாதுள்ள மீதமுள்ள கொடுப்பனவுகள் டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. வங்கிக் கணக்கு தொடங்காத பயனாளிகள், ஜூலை மாதத்துக்கான தவணைத் தொகையில் பயனடைய டிசெம்பர் வரை அவகாசம் வழங்கப்படும்.

பயனாளிகள் அஸ்வெசுமா கணினி அமைப்பினால் வழங்கப்பட்ட ஒரு கடிதத்தை சேகரித்து அதை இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி அல்லது பிராந்திய அபிவிருத்தி வங்கியின் எந்தவொரு கிளையிலும் சமர்ப்பித்தால் அவர்களால் வங்கிக் கணக்குகளைத் திறக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## தீ விபத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணி நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

சம்பவஇடத்திற்குவிரைந்தயாழ். மாநகரசபைதீயணைப்புபடையினர் தீப்பரவலை கட்டுப்பாடுக்குள் கொண்டு வந்தனர்.

ஆரம்பகட்ட விசாரணைகளின் அடிப்படையில் மின்னொழுக்கு காரணமாக குறித்த தீ விபத்து ஏற்பட்டதாக தெரிய வந்துள்ளது.

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகளுக்கான திணைக்களம், வணிக திணைக்களம், சுங்கத் திணைக்களம் மற்றும் முதலீட்டுச் சபை உள்ளிட்ட நிறுவன சிரேஷ்ட அதிகாரிகள் இந்த தேசிய வர்த்தகப் பேச்சுவார்த்தைக்கான குழுவில் அங்கத்துவம் பெற்றுள்ளனர்.

உரிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் பிரதிநிதிகளுடன்கூடிய உபகுழுக்கள் வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் ஊடாக பங்குதாரர்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு தேசிய வர்த்தக பேச்சுவார்த்தை குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

அரசாங்கத்தின் 2048 ஆம் ஆண்டில் அபிவிருத்தி அடைந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கான ஆரம்பமாக மேற்படி வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் உள்நாட்டு பொருளாதாரத்தைப் பலப்படுத்தும்போது, விநியோக கொள்ளளவைப் பலப்படுத்துவது, சந்தை பிரவேசம் ஆகிய விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இலங்கையின் சம்பிரதாயபூர்வமான மிகப்பெரிய இறக்குமதியாளர்களாக அமெரிக்கா, ஐக்கிய இராஜ்ஜியம், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுடனான தொடர்புகளைப் பலப்படுத்திக்கொள்ளும் அதேநேரம் தெற்கு, தென்கிழக்கு, மேற்கு ஆசியாவுடனான ஒருங்கிணைந்த வேலைத்திட்டங்களை விரிவுபடுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல் இலங்கையின் பொருட்கள் வியாபாரம் தொடர்பில் கவனம்செலுத்தி, இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தமான பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தகஒப்பந்தமான ஆகியவற்றை கைசாத்திட எதிர்பார்க்கப்படுகிறது.

தெற்காசியாவின் சுதந்திர வர்த்தகவலயம் மற்றும் வலயத்தின் ஒத்துழைப்புக்கான தெற்காசியச் சங்கம் ஆகியவற்றுடனான ஏற்றுமதியை இலக்குவைத்த வரத் தக ஒப்பந்தங்கள் ஊடாக, இலங்கை தெற்காசியாவின் வர்த்தக சந்தைக்குள் பிரவேசித்துள்ளது.

அதேபோல் தற்போது, பங்களாதேஷ் உடனான பொருட்கள் வர்த்தகம் தொடர்பான ஏற்றுமதியை இலக்குவைத்த வர்த்தக ஒப்பந்தங்களைக் கைசாத்திட பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2021ஆம் ஆண்டின் ஜீன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட அந்த பேச்சுக்கள் தற்போது வரை மூன்று சுற்றுகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை மற்றும் பங்களாதேஷிடத்தில் முன்னேற்றகரமான வர்த்தக நிலைமைகள் காணப்படுவதால், தற்போதுள்ள ஒப்பந்தங்களுக்குமாறான இருதரப்பு வர்த்தகத்தை முன்னேற்றிச் செல்வதற்கான ஒப்பந்தமாக இது அமைந்திருக்கும் என்றும் அறியப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியாவிற்கிடையில் கைசாத்திடப்படவுள்ள உத்தேச பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒப்பந்தமான தொடர்பிலான 12 ஆவது சுற்றுப் பேச்சு எதிர்வரும் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. தற்போது காணப்படும் இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கு மேலதிகமான விடயங்கள் மேற்கூறிய ஒப்பந்தத்தில் உள்ளடக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுதந்திர ஒப்பந்தங்கள் வாயிலாக இலங்கை-ஆசியான்(யுளநுயுஹி) நாடுகளுக்கிடையிலான தொடர்பும் வலுவடைகிறது. 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாத்தில் சிங்கப்பூருடன் நீடிக்கப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைசாத்திடப்பட்டதோடு, 2018 மே மாதத்தில் அந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தது.

அதேபோல் தாய்லாந்து மற்றும் இந்தோநேசியா போன்ற நாடுகளுடனும் இலங்கை சுநந்திர வர்த்தக ஒப்பந்ங்களைக் கைசாத்திடுவதற்கான பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.

தாய்லாந்துடனான மூன்றாம் சுற்றுப் பேச்சுக்கள் இவ்வருடத்தின் ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டதோடு, 7ஆம் சுற்றுப்பேச்சு கடந்த வாரத்தில் கொழும்பில் நடைபெற்றது. அந்த சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், பொருட்கள், நடைமுறைச்சட்டங்கள், சுகாதார பாதுகாப்பு மற்றும் மூலிகை பாதுகாப்பு நடவடிக்கைகள், வர்த்தக தடைகளுக்கான தீர்வுகள், வர்த்தகத் தீர்வுகள், சேவை, முதலீடு, முரண்பாடுகளைத் தீர்த்தல், அறிவுசார் சொத்துரிமை, சுங்கச் செயன்முறைகள் மற்றும் வர்த்தக வசதிகள், பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்பு உள்ளிட்ட துறைகளை உள்ளடக்கியுள்ளன.

தாய்லாந்துடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் வாயிலாக ஏற்றுமதியை இலக்குவைத்த தொழிற்சாலைகளுக்கான நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கவும், முன்னுரிமை அளிக்கப்பட்ட பொருளாதார ஒத்துழைப்புக்களைப் பலப்படுத்திக்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அதுமட்டுமின்றி சீனாவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், அதிலும் ஆறு சுற்று பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்துள்ளன. அறியப்பட்ட சில இலங்கை உற்பத்திகளுக்காக சீன சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளவும், சீனா வின் வர்த்தக சந்தைக்குள் பிரவேசிக்கவும், உலகின் பெறுமதிமிக்க அமைப்புக்களுடன் பாதுகாப்பான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் இலங்கை தீர்மானித்துள்ளது.

உலகின் பெரிய வர்த்தக ஒப்பந்தமாக கருதப்படும் குவுயு எனப்படும் 'வலயத்தின்நீடிக்கப்பட்ட பொருளாதார கூட்டமைப்பு' ஒப்பந்தத்துடன் இணைந்துகொள்வதோடு ஓசியானியா மற்றும் கிழக்காசியாவுடன் படிப்படியான வர்த்தகக் கூட்டுச் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் இலங்கை ஆசியாவுடன் இணங்கிச் செயற்படுகிறது. 'வலயத்தின்நீடிக்கப்பட்ட பொருளாதார கூட்டமைபு' இணைவதற்கான அபிப்பிராய பத்திரத்தை இலங்கை சமர்பித்துள்ளது.

அமைச்சரவை அனுமதியுடன் ஜனாதிபதி செயலகத்தின் கீழ் நிறுவப்பட்டிருக்கும் சர்வதேச வர்த்தக அலுவல்கள் பணியகம், மேற்படி அனைத்து பொருளாதார ஒப்பந்தங்கள் தொடர்பிலும் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகிறது.

## சிகை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுறவுச்சங்க பிரதிநிதி கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சாள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் மாவட்டச்செயலக கேட்போர்கூடத்தில் நேற்று இடம்பெற்றபோதே இந்தக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

இதன்போது அவர் மேலும் விபரம் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டத்தில் சிகை அலங்கரிப்புத்தொழிலாளர் பல்வேறு இடர்களைச் சந்திக்கும் நிலையில் சிகைஅலங்கரிப்புத்தொழிலாளரின் சமுர்த்திக் கொடுப்பனவு கூட நிறுத்தப்படுகின்றது.

இந்தநிலையில் வடமராட்சியின் நவிண்டில், செம்பியன்பற்று பகுதிகளில் உள்ள இராணுவ முகாமில் சிகை அலங்கரிப்பு நிலையம் நடத்தப்படுவதனால் அப்பகுதி தொழிலாளர்கள் வருமான இழப்பினைச் சந்திக்கின்றனர். எனவே இராணுவத்தினர் நடத்தும் சிகை அலங்கரிப்பு நிலையத்தை தடுத்து நிறுத்த இந்தக் குழு உதவ வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

படையினரின் பணி அதுவல்ல, அதனால அக் கடைகள் மூடப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தபோது கூட்டத்தில் கலந்துகொண்ட இராணுவ அதிகாரி உடனடியாக அந்த இரு கடைகளும் மூடப்படும் என உறுதியளித்தார்.

## தீவக மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சாள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று மாவட்டச் செயலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றபோதே இதனைத் தெரிவித்தார்.

''குடாநாட்டின் கடல் கடந்த தீவக போக்குவரத்திற்காக அரச படகுகளான நெடுந்தாரகை, எழுதாரகை, வடதாரகை என பல தாரகைகள் உண்டு. இதில் ஒரு தாரகையும் இயங்க முடியாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அத்தோடு குமுதினியும் 2 ஆண்டுகளாக இயங்கவில்லை அவ்வாறானால் மக்கள் என்ன செய்வது?" என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன்.

இதன்போது பதிலளித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் குரூஸ் வட தாரகையைத் திருத்துவதற்கு 95 மில்லியன் ரூபாவும், நெடுந்தாரகையைத் திருத்த 59 மில்லியன் ரூபாவும் வேண்டும். எழுதாரகைக்கு 10.3 மில்லியன் ரூபா வேண்டும். குமுதினிக்கு 22 மில்லியன் ரூபா செலவில் திருத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இத்தனைமில்லியன்கள்செலவு செய்து திருத்திய பின்பாவது இந்தத் தாரகைகள் சீராக இயங்குமா என்று கேள்வி எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், இத் தொகைக்கு புதிய படகுகளை கொள்வனவு செய்ய முடியாதா என்றும் கேட்டார்.

இதன்போது பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தீவுப் பயணங்களிற்காக புதிய படகுகளை கொள்வனவு செய்ய உத்தேச செலவு மதிப்பீடு தயார் செய்து தரும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதேநேரம் தற்போது நெடுந்தீவிற்கு ஓடும் கூட்டுறவுச் சங்கத்திற்குரிய படகில் 150 பேர் பயணிக்க முடியும் ஆனால் மழை நேரத்தில் அந்தப் படகில் பயணிக்க முடியாது. அதற்கு ஒரு வழிக்கு 200 ரூபா கட்டணம் அறவிடப்படுகின்றது. இதனால் யாழ்ப்பாணத்தில் இருந்து நெடுந்தீவுக்குப் பணிக்காச் செல்லும் உத்தியோகத்தர்கள் ஒரு நாளைக்கு படகிற்கே 400 ரூபா செலவிடவேண்டி ஏற்படுகின்றது என்று சுட்டிக்காட்டினார் என நெடுந்தீவு பிரதேச செயலாளர்.

இதையடுத்து தாரகைகளைத் திருத்தும் வரையில் கடற்படையினரிடம் உள்ள 300 பேர் பயணிக்ககூடிய சண் லங்கா கப்பலைக் கோரலாம் என்ற யோசனையை முன்வைத்த அமைச்சர், தீவக மக்களுக்கு விரைவில் மாற்று ஏற்பாடு செய்யப்படும் என்றும் உறுதியளித்தார்.

## ஜனாதிபதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் பல்கலைக் கழகத்திற்கு நீண்ட காலக் குத்தகைக்கு வழங்கப்பட்டுவதற்கான பூர்வாங்க பணிகள் நிறைவடைந்துள்ளதாக ஊடகச்செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்திலும் இது பற்றி ஆராயப்பட்டது.

கூட்டத்தில் கருத்து தெரிவித்த ஒருங் கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதி மாளிகையை தனியார் பல்கலைக்கழகத்திற்கு வழங்குவது தொடர்பில் தீர்மானகரமான நடவடிக்கைகள் இதுவரையில் முன்னெடுக்கபடவில்லை என்றே தான் நம்புகிறார் எனத் தெரிவித்தார். அந்த மாளிகையைத் தான் நேரில் சென்றுபார்வையிடவுள்ளார் என்றும் தெரிவித்தார்.

மேலும், நகரஅபிவிருத்திஅதிகார சபையினால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தலைமையிலான குழுவொன்றையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நியமித்தார்.

## எரி வாயு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் எனவும் போதைப் பொருள்களை கொள்வனவு செய்வதற்காகவே எரிவாயு சிலிண்டர்களைத் திருடினர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் குருநகர்ப் பகுதியைச் சேந்தவர்கள் எனவும் விசாரணைகளின் பின் அவர்களை நீதிமன்றத்தின் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## சீன ஆய்வுக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்களை கொண்டு செல்ல முடியும் என்பதோடு அறுபது பேர் வரையில் பயணிப்பதற்கான வசதிகளும் காணப்படுகின்றன.

இந்நிலையில் குறித்த கப்பலின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கருத்து வெளியிடுகையில், ஆய்வுக்கப்பலினைப் பார்வையிடுவதற்கு ஆர்வமுள்ளவர்களை வருகை தருமாறு நாம் அழைப்பு விடுப்பதோடு இன்றும் நாளையும் அதற்கான வாய்ப்புக்கள் உள்ளமையையும் நாம் தெரிவித்துக்கொள்கின்றோம். பொதுமக்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு இது பயனுள்ளதாக இருக்கும் என்றும் கருதுகின்றோம் - என்றார்.

இந்த மூன்று நாட்கள் மட்டுமே இந்தக் கப்பல் இலங்கையில் தங்கியிருக்கும். அதன் பின்னர் இலங்கையைச் சேர்ந்த 4 விஞ்ஞானிகளையும் ஏற்றிக்கொண்டு ஆய்வுகளுக்காகப் புறப்படும்.

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவாகக் கொண்ட அழகிய நாடாகும். பெறுமதியான கனிய வளங்களும் உலகில் இயற்கை அனர்த்தங்கள் குறைந்த நாடாகவும் இலங்கை காணப்படுகிறது.

எமது நாட்டின் மிகப் பெறுமதியான வளமாக காணிகளே காணப்படுகின்றன. சனத்தொகை அதிகரிப்பினால் காணிகளுக்கான பெறுமதியும் அன்றாடம் அதிகரிக்கிறது. நகரங்களை அண்டிய பகுதிகளிலும் அதேநிலை காணப்படுகிறது. நகர அபிவிருத்தி அதிகார சபையின் வசமாக பெறுமளவான காணிகள் உள்ளன.

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் உள்ளன. அவற்றில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட சில வேலைத்திட்டங்களும் உள்ளன. நகர நிர்மாணம் மற்றும் நகர விருத்தி திட்டங்களும் காணப்படுகின்றன. அத்தோடு உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகளுக்கு அவசியமான காணிகளும் உள்ளன.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அவசியமான நல்ல வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வருமானம் ஈட்டும் வகையில் காணிகளை பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மெகலம் வீதியின் பெறுமதியான காணிகளை குறிப்பிட முடியும்.

கண்டி நகரம், போகம்பரை சிறைச்சாலை, நுவரெலியா உள்ளிட்ட அனைத்து நகரங்களிலும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணிகள் பேர்ச்சஸ் முதல் ஏக்கர் அளவிலான காணிகள் காணப்படுகின்றன. சில காணிகள் தொடர்பிலான தகவல்கள் கிடைக்கவில்லை. அவற்றை தேடியறியும் பணிகள் ஆரம்பிக்கப்படும். போகம்பர சிறைச்சாலை பகுதியை மையயப்படுத்திய புதிய முதலீடுகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் உரிய நிதி முகாமைத்துவத்தின் காரணமாக வீடமைப்பு அதிகாரசபையினால்

தொடர்ச்சி 8ம் பக்கம்...

# அரசு வழங்கிய வயல் காணிக்கான உரிமையைக் கோரிப் போராட்டம்








ஒன்பது வருடங்களுக்கு முன்னர் பிரதேச செயலகத்தால் விவசாய நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட வயல் காணிகளுக்கு வழங்கப்பட்ட உறுதிப்பத்திரத்தின் அசல் ஆவணத்தைக் கோரி, போரால் பாதிக்கப்பட்ட வன்னி விவசாயிகள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கடந்த திங்கட்கிழமை, முல்லைத்தீவு, பாண்டிக்குளம் சந்தியில் இருந்து மாந்தை கிழக்குப்பிரதேசசெயலகம்வரை பேரணியாக வந்த வன்னிவிளாங்குளம் விவசாயிகள், 2014ஆம் ஆண்டு துவரன்குளத்தில் வயல் காணிகளை கையளித்து வழங்கப்பட்ட உறுதிப்பத்திரத்தின் அசல் ஆவணத்தை வழங்குமாறு பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடுத்து கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

யுத்தம் காரணமாக வன்னிவிளாங்குளம் மக்கள், தமதுகிராமகாணிகளையும், பாரம்பரிய விவசாய நிலங்களையும் கைவிட்டு உயிர் பாதுகாப்பிற்காக வேறு பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்தனர் என, வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

மீள்குடியேற்றத்தின் பின்னர், யுத்தத்திற்கு முன்னர் பாரம்பரியமாக பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்பட்டு வந்த காணிகளைத் துப்புரவு செய்து மீண்டும் விவசாயம் செய்ய ஆயத்தமான போது, குறித்த காணி வன திணைக்களத்துக்குச் சொந்தமானது என வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக காணியை வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, 2014ஆம் ஆண்டு, துவரங்குளம் பிரதேசத்தில், 58 குடும்பங்களுக்கு, தலா இரண்டு ஏக்கர் காணியை வழங்குவதற்கு, மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன என ரவிகரன் தெரிவித்தார்.

ஆனால், தற்போது வரை வயல் காணிகளுக்கான உரிமத்தின் அசல் ஆவணம் விவசாயிகளுக்கு வழங்கப்படாமையால், விவசாயத்தில் ஈடுபட முயற்சிக்கும் அவர்களுக்கு, வனப்பாதுகாப்புத் துறையினர் இடையூறு ஏற்படுத்துகின்றனர்.

போராட்டத்தின் முடிவில் விவசாயிகளின் கோரிக்கைகள் அடங்கிய மனுவை உதவி பிரதேச செயலாளர் ஜெ.மயூரன் பெற்றுக்கொண்டதோடு, இதுகுறித்து உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று, நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.

நாடாளுமன்றஉறுப்பினர்களானசெல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, எஸ்.சிவமோகன், செயற்பாட்டாளர்களான பீற்றர் இளஞ்செழியன் ஆகியோரும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு தமது ஆதரவைத் தெரிவித்ததாக பிரதேச ஊடகவியாளர்கள் தெரிவிக்கின்றனர்.(05)

## சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் மேம்பாட்டுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 165 மில்லியன் டொலருதவி!

ஆசிய அபிவிருத்திவங்கியின் 165 மில்லியன் டொலர்கள் நிதியுதவியுடன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு சலுகை வட்டி வீதத்தின் கீழ் முதலீட்டு மற்றும் நடவடிக்கை மூலதனத்தை வழங்கவதற்காக அரசாங்கத்தால் 'சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கடன் முன்மொழிவுத் திட்டம்' நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு வங்கிகளால் நிதி வழங்குவதற்கு முன்னுரிமையளிப்பதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள் எதிர்கொள்ள நேரிட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வாக தேசிய கடன் பாதுகாப்பு நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமது வியாபாரங்களுக்கு நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு தொடர்ந்தும் சிரமங்களை எதிர் கொள்கின்ற தொழில் முயற்சியாளர்களுக்காக 'சிறிய மற் றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்துவதற்கான நிதித்திட்டம்' எனும் புதிய கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதுடன், அதற்காக முற்கட்டமாக 100 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, குறித்த கடன்தொகையைப் பெற்றுக் கொள்வதற்கும், அதற்குரிய ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (05)

## மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் உறுப்பினர் உயிரிழப்பு

### கால்வாயில் விழுந்ததால் விபத்து

களுத்துறை வல்லாவிட உள்ளூராட்சி சபையில் மக்கள் விடுதலை முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்திய உறுப்பினர் கால்வாயில் விழுந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என வெலிபன்னை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் வலல்லாவிட்ட பிரதேசத்தில் போப்பிட்டி பகுதியைச்சேர்ந்த 70வயதுடைய ஜ.ஏ.வீரசிறி என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் வெலிபன்னை ஊராகொடை பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றுக்கு சென்றிருந்த போது அவர் காணாமல் போயுள்ள நிலையில், இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பட்டின் படி தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனையடுத்து, பொலிஸ் தேடுதல் நடவடிக்கையின் போது அருகில் அமைந்துள்ள கால்வாயில் சடலமாக அவர் மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சடலம் பிரேத பரிசோதனைக்காக களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். இந்தசம்பவம் தொடர்பில் வெலிப்பன்னை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)



## பிரித்தானிய உயர்ஆணையர் ஜேம்ஸ் டோரிஸ் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருடன் சந்திப்பு

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டோரிஸ் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோனை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பு கொழும்பில் உள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சுக்கு வருகை தந்த பிரித்தானிய உயர்ஸ்தானிகரை இராஜாங்க அமைச்சர் தென்னக்கோன் வரவேற்றதுடன், முக்கிய விடயங்கள் குறித்தும் சிநேகபூர்வமாகக் கலந்துரையாடினார்.

நட்புரீதியான இந்த சந்திப்பின் போது இருதரப்பு முக்கியத்துவம் மற்றும் பரஸ்பரம் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

இந்த சந்திப்பில் கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேர்ணல் டெரன் வூட்ஸ் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)

## கொட்டிகாவத்தை சனச வங்கி திருட்டு குறித்து நால்வர் கைது

கொட்டிகாவத்தை சனச வங்கியிலிருந்து சுமார் ஒரு கோடியே இருபது லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டமை உட்பட 5 குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றவாளியான 'நாவல குஞ்சு' என்பவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என மேல் மாகாண தெற்கு மாவட்ட குற்றப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட நாவல குஞ்சு என்பவருக்கு எதிராகக் கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் இன்று வரை பதிவுசெய்யப்பட்ட சுமார் 13 குற்ற வழக்குகளும் நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என கொட்டிகாவத்தை பொலிஸார் தெரிவிக்கின்றனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் நாவல குஞ்சு என்பவரின் மனைவியும் உள்ளடங்குவதோடு பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டின் கீழ் ஏனைய சந்தேக நபர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார் விசாரணையின் போது திருடப்பட்ட 463 கிராம் பெறுமதியான தங்க நகைகள், 75 ஆயிரம் ரூபா பெறுமதியான கைக்கடிகாரம், பித்தளை விளக்கு, தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் ரைஸ்குக்கர் ஆகியவை கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொட்டிகாவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## சுற்றுலாவிகளுடன் செக். விமானம் கொழும்பை புதன் வந்தடைந்ததது

லாட்போலிஷ்விமானம்சேவைக்கு சொந்தமான முதலாவது 'சார்ட்டர்' விமானம் புதன்கிழமை காலை செக் குடியரசில் இருந்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது. குறித்த விமானத்தில் 252 சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அடுத்த வருடம் மார்ச் 2 ஆம் திகதி வரை இயக்கப்படும் குறித்த விமான சேவை செக் குடியரசின் செடோக், இலங்கை சுற்றுலா மற்றும் ஜெட்விங் டிராவல்ஸ் ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஹேலிஸ் விமான போக்குவரத்து நிறுவனம் இலங்கையின் லாட் போலிஷ் விமானம் சேவைக்கான பொது சேவைகள் நிர்வாகமாக இயங்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. வருகைதந்த குறித்தவிமானத்திற்குபண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் அன்பானவரவேற்புநிகழ்வும்இடம்பெற்றது.

பயணிகள் பாரம்பரிய வரவேற்பு நடன நிகழ்ச்சியுடன் அழைத்துவரப்பட்டதுடன் ஒவ்வொரு சுற்றுலாப் பயணிகளுக்கும் இலங்கை தேநீர் பொதிகள் பரிசாக வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரச நிறுவனங்களின் செயற்றிறன் இன்மை

இலங்கை மின்சார சபை மீண்டும் மின்சாரக் கட்டணத்தை அதிகரித்துள்ளது. கட்டணம் 18% உயர்த்தப்பட்டுள்ளது. யுனிசெவ் அறிக்கையின்படி, நாட்டில் இன்னும் கடுமையான உணவுப் பற்றாக்குறை நிலவுகிறது. அக்டோபர் 2022 முதல் பிப்ரவரி 2023 வரை நிலைமை மோசமடையும் என்று அந்த அறிக்கை எதிர்வுகூறியிருந்தது. அப்படியிருந்தும் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

6.2 மில்லியன் மக்கள் (மக்கள் தொகையில் 28 சதவீதம்) மிதமான உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றனர் என்றும், 66,000பேர்கடுமையானஉணவுப்பாதுகாப்பற்றவர்களாக இருக்கின்றனர் என்றும் யுனிசெஃப் அறிக்கை மதிப்பிடுகிறது.

ஐந்தில் இரண்டு குடும்பங்கள் (41.8 சதவீதம்) தங்கள் செலவினங்களில் 75 சதவீதத்திற்கும் மேலாக உணவை வாங்குவதற்கு மட்டுமே செலவிடும் நிலையில் இருக்கின்றனர். இதனால் சுகாதாரம் மற்றும் கல்விக்காகச் செலவிடவில்லை. பல குடும்பங்கள் தங்களுடைய சேமிப்பைத் தீர்ந்துவிட்டன மற்றும் பணவீக்கம் முடங்கியதால் போராடி வருகின்றன.

கொரோனா பெருந்தொற்றைத் தொடர்ந்து, அரசு சாரா துறைகளில் உள்ள பெரும்பாலான சாதாரண மக்களின் ஊதியம் பாதியாக குறைக்கப்பட்டது. ஆனால், அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. இப்படிப்பட்ட நிலையில் மின் கட்டண அதிகரிப்பும் இந்த மக்களைக் நசுக்கிக் கொன்றுவிடாதா?

அரசுவழங்கும்அஸ்வெசும உதவித்திட்டத்தைப்பெறுவதற்கான வங்கிக் கணக்குகளை ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் கொண்டிருக்கவில்லை என்கின்றது செய்தி. ஏனெனில் வங்கிக் கணக்கைதொடங்குமளவிற்குஅவர்களிடம்பணமோதேவையோ இல்லை. இத்தகைய நிலையில்தான் ஆட்சியாளர்கள் மக்கள் மீது தொடர்ந்தும் சுமையை ஏற்றி வருகின்றனர்.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் வரை, எதிர்காலத்தில் மின்சாரக் கட்டணங்கள் திருத்தப்படாது என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்து வந்தார். அதே அமைச்சர் இப்போது இம்மாத இறுதியில் இருந்து கட்டணங்கள் 18 சதவீதம் உயரப் போகிறது என்று வெறித்தனமாகச் சொல்கிறார்.

எதிர்காலத்தில் மின்சாரக் கட்டணங்கள் இரண்டு வருடத்திற்கு ஒரு முறை திருத்தப்படும் என்ற முந்தைய அட்டவணையில் இருந்து விலகி, அடுத்த ஆண்டு முதல், மூன்று மாதங்களுக்கு ஒருமுறை திருத்தம் செய்யப்படும் என்றும் அவர் கூறுகின்றார். என்றால் மின் கட்டணம் இன்னும் உயரும் என்றுதான் அர்த்தம் கொள்ளவேண்டியிருக்கின்றது.

ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அளுத்கமகேவின் கருத்துப்படி, புதிய இணைப்புகள், மரங்களின் கிளைகளை வெட்டுதல் போன்ற பணிகளுக்கு வெளியில் இருந்து ஒப்பந்த அடிப்படையில் ஆட்கள் பெறப்பட்டதால் இலங்கை மின்சார சபை அளவுக்கு அதிகமாக பணியாளர்களை கொண்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினரின் கூற்றுப்படி, ளீசிய தொழிலாளி ஒரு மாத சம்பளம் ரூ. 120,000.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் விஜேசேகர நேற்று (23.10.2023) அறிவித்தார், இந்த ஆண்டில் முந்தைய விலை உயர்வுகள் இருந்தபோதிலும், செப்டெம்பர் இறுதியில் ளீசிய இன் இயக்க இழப்பு ரூ. 29 பில்லியன், 2022 ஆம் ஆண்டுக்கான நிகர இழப்பு ரூ. 272 பில்லியன். 2014 – 2022 க்கு இடையில் ளீசிய இன் திரட்டப்பட்ட இழப்புகள் ரூ. 565 பில்லியன். ஓ டெம்போரா, ஓ மோர்ஸ்!

மின்சார சபையில் ஏதோ தவறு நடந்துள்ளது. ஹானிய் அரசாங்கத்துடனான ஒப்பந்தத்தின் கீழ், ளீசிய க்கு மானியம் வழங்க முடியாது. சாதாரண தொழிலாளிகள் கூட மாத ஊதியமாக ரூ.100/–ஐப் பெறும் இந்த ஒற்றைக்கல்லுக்கு இந்நாட்டின் பொதுமக்கள் மானியம் வழங்குவார்கள் என்று எதிர்பார்ப்பது சாத்தியமற்றது. 120,000. மின்சார சபை தனது செலவுகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்காமல், அதற்குமான பணத்தை மக்களிடமிருந்து பிடுங்குவதற்கே சிந்திக்கிறது. இது கொடுமை.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்க வேண்டியது கட்டாயம். வினைத்திறனுடன் அரச நிறுவனங்கள் செயற்படுவதற்கான வழி வகைகள் ஆராயப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அரச நிறுவனங்களுக்குள் தற்போதுள்ள முறைமை திறமையானவர்களையும் துடிப்பானவர்களையும்கூட செயற்படவிடாமல் அந்த நிறுவனத்தை தோல்வியடைய வைக்கிறது. இந்த நிலை மாற்றப்படவேண்டும். திறமையாளர்களுக்கும் இளைஞர்களுக்கும் வாய்ப்பளிக்கும் நிலை உருவாக்கப்படவேண்டும்.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கப்போவதாக அமைச்சர் காஞ்சன சொல்லிக் கொண்டேயிருக்கிறார். அப்படி நடந்தால் நல்லதுதான். ஆனால், கடந்த ஒரு வருடத்திற்கும் மேலான ரணிலின் ஆட்சியில் அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுதான் உண்மை. அதற்குப் பதில் ஆட்சியாளர்களதும் அதிகாரிகளதும் செயற்றிறனின்மையின் விளைவுகளையும் மக்களே அனுபவிக்கவேண்டும் என்று நிர்ப்பந்திப்பதுதான் இந்த ஆட்சியில் நடக்கிறது. மக்கள் மீது கரிசனை எடுத்து அவர்களுக்கு உதவும் வகையில் அனைத்து அரச நிறுவனங்களையும் மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதன் மூலம் செலவு குறைந்த செயற்றிறன் உள்ள அரச நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும்.

# ஊருக்கு இளைத்தவன்...

**என் சத்திய மூர்த்தி**



தங்களுடைய ஒரிஜினல் சரக்கு விற்பனையாக வில்லை என்று 'நாடு கடந்த தமிழீழ அரசு', இந்தியாவில், அதுவும் தமிழ் நாடு தலைநகர் சென்னையில் இலங்கை மலையக தமிழர்களின் இருநூறாவது ஆண்டு விழாவை முன்னெடுக்க முயற்சித்தது. அவர்களின் தாய் அமைப்பான விடுதலை புலிகள் அமைப்பு இந்தியாவில் தொடர்ந்து தடைசெய்யப்பட்டுள்ளதால், சென்னை பொலிஸ் அவர்களது நிகழ்ச்சிக்கு அனுமதி அளிக்கவில்லை.

தங்களுடைய நிகழ்ச்சிக்கு அனுமதி வழங்காததற்கு, நாடு கடந்த அரசின் தலைவர் அல்லது 'பிரதமர்' என்று தன்னை கூறிக்கொள்ளும் ருத்திரகுமாரன், தமிழ்நாடு அரசிற்கு கண்டனம் தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் சட்டதரணியாக பணியாற்றும் அவர், இந்தியாவின் மத்திய அரசு தடைசெய்துள்ள அமைப்புடன் தொடர்புடைய தங்களது அமைப்பிற்கு அந்த நாட்டில் உள்ள மாநில அரசு எவ்வாறு அனுமதி அளித்திருக்க முடியும் என்று எதிர்பார்த்தார் என்பது புரியவில்லை.

இதில் இரண்டு விடயங்கள் தெளிவாகின்றன. ஒன்றில் ருத்திரகுமாரனுக்கு அடிப்படை சட்ட அறிவுகூட இல்லை. அல்லது, சட்டம் தெரிந்துகொண்டே தவறாக நடந்துகொள்ள முயற்சிக்கிறார். இதில் முதலாவது அனுமானம் தவறானது. இலங்கை அரசுடன் விடுதலை புலிகள் அமைப்பு நடத்திய பேச்சுக்களில் அவரும் கலந்து கொண்டிருந்தவர். அதில் அவர் ஒரு சட்டதரணி என்பது முக்கியமாகக் கூறப்பட்டு வந்த விடயம். குறிப்பாக, அந்த அமைப்பின் பேச்சுக் குழுவிற்கு தலைமையேற்று வந்த அன்றன் பாலசிங்கத்தின் காலத்திற்கு பின்னர், ருத்திரகுமாரனுக்கே அந்த பொறுப்பும் வழங்கப்பட்டது.

இந்த பின்னணியில், தங்களது விழாவிற்கு அனுமதி அளிக்கவில்லை என்று தமிழ் நாடு அரசை கண்டிக்கும் அவரது போக்கு வியப்பளிக்கிறது. அல்லது, அது, அவரது அறிவின்மையை குறிக்கிறது. அதற்கும் வாய்ப்பு இல்லை. காரணம், ருத்திரகுமாரனின் அறிவு திறமை குறித்து இங்கு பலரும் நன்றாக அறிந்துள்ளனர்.

### வீண் வேலை

அவ்வாறென்றால், அவருக்கு எதற்கு இந்த வீண் வேலை? இந்தியாவின் மத்தியில் ஆளும் பிரதமர் நரேந்திரமோடியின் பாரதிய ஜனதா கட்சிக்கும், தமிழ் நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழகத்திற்கும் அவர்களது ஆட்சிக்கும் ஏழாம் பொருத்தம் என்பது அனைவரும் அறிந்த விடயம். எவ்வாறெல்லாம், திமுக கட்சியை தொடர்ந்து தாக்கி, ஆட்சிக்கும் தொடர்ந்து செக் வைக்கலாம் என்று கச்சை கட்டிக்கொண்டு, மத்திய பாரதிய ஜனதா, களத்தில் இறங்கி வெகுகாலம் ஆகிவிட்டது.

பாரதிய ஜனதாவின் அவசரம் அவர்களுக்கு. முதலில், 2016இல் ஜெயலலிதா, பின்னர் 201ஈல் கருணாநிதி என்று தமிழ் நாட்டின் இரண்டு பெரிய அரசியல் ஆளுமைகள் மறைந்ததை தொடர்ந்து, அடுத்தது, 'திராவிட நாட்டிலும்' தங்களது ஆட்சிதான் என்று மனப்பால் குடித்துவந்தனர். ஆனால், மறைந்த அந்த இரு தலைவர்களின் இடங்களிலும், முறையே எடப்பாடி பழனிசாமி, மு.க.ஸ்டாலின் ஆகியோர் ஆளுமை செலுத்தத் தொடங்கியதையும் அவர்களை அந்த இரு கட்சிகளும் பின்னர் தமிழக மக்களும் ஏற்றுக்கொண்டதையும் பாரதிய ஜனதாவால் ஜீரணிக்க முடியவில்லை. அடுத்த ஆண்டு, இந்தியாவில் நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில், தமிழ் நாட்டில் திராவிட கட்சிகளுக்கு செக்வைக்கும் முயற்சியில். பாரதிய ஜனதாக் கட்சியும் மத்திய அரசும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன என்பதும் அனைவரும் அறிந்ததே.

### துரோகி பட்டம்

இந்த பின்னணியில், தமிழ் நாடு அரசை சிக்கலில் மாட்டிவிடும் வகையில் ருத்திரகுமாரனின் அமைப்பு செயல்படுவது, பல்வேறு விதமான கேள்விகளை எழுப்புகிறது. அந்த அமைப்பு ஒரு நிகழ்ச்சி நடத்த மாநில அரசு அனுமதி கொடுக்கவில்லை என்று ருத்திரகுமாரன் விமர்சிப்பது வியப்பை அளிக்கிறது. அதுவும், இது அவர்களது முதல் முயற்சி அல்ல. ஆனால், மலையக தமிழர்கள் பெயரில் இதுவே அவர்களின் முதல் முன்னெடுப்பு.

ஏன், இதனை ருத்திரகுமாரன் வாழும் அமெரிக்காவிலோ, அல்லது, புலம்பெயர்ந்தோர் அதிகமாக அரசியல் செய்யும் கானடா, ஆஸ்திரேலியா அல்லது ஐரோப்பிய நாடுகளில் ஒன்றிலோ அவர்கள் செய்யவில்லை என்ற கேள்வி எழுகிறது. அல்லது, ஏன், இலங்கையிலேயே தங்களது முன்னணி அமைப்புகள் ஒன்றின் பெயரில் நடத்த முயலவில்லை என்பதும் தெரியவில்லை.

இனப்போரின் கடைசிக்காலம் தொடங்கி, 2021ஸ்டாலின் தமிழ் நாடு முதல்வராவது வரை, அவரது தந்தையும் அரசியல் ஆசானுமான கருணாநிதிக்குத் துரோகி பட்டம் கட்டி, நாடு கடந்த இந்த அமைப்பு தொடர்ந்து பழித்துரைத்து வந்தது. போதாதற்கு, 2011 முதல் 20-21 வரை பத்தாண்டு காலம் தமிழ் நாட்டில் ஆட்சியில் இருந்த அஇஅதிமுக மற்றும் அந்தக் கட்சி தலைவர்களான ஜெயலலிதா, பின்னர் பன்னீர்செல்வம், தொடர்ந்து பழனிசாமி ஆகியோருக்கு ஜால்ரா அடித்து வந்தது. ஆனால், எப்போது திமுகவின் தேர்தல் வெற்றிவாய்ப்பு பிரகாசமாயிற்றோ, அப்போதே அவர்கள் தங்களது ஊது குழலின் திசையையும் இசையையும் மாற்றினார்கள்.

சொந்தக் காரியம் ஜிந்தாபாத் என்ற ஒரே குறிக்கோளுடன், தங்களது இலக்கினை சென்றடைய அவர்கள் எதுவும் செய்யத் தயாராயிருந்தார்கள். தொடர்ந்து அவ்வாறே செயல்பட்டும் வருகிறார்கள். அந்த விதத்தில்தான், மலையகத் தமிழர்கள் சார்ந்த அவர்களது தமிழ் நாடு முன்னெடுப்புகளை காண வேண்டி உள்ளது.

### விலாங்குமீன்விளையாட்டு

இதுவே, உள்நாட்டிலிருந்து தமிழ் நாட்டு மக்களையும் அரசியல் மற்றும் அரச தலைமைகளையும் குறிவைத்து செயலாற்றும் மிதவாத தமிழ் அரசியல் தலைமைகளுக்கும், குட்டி தலைவர்களுக்கும் பொருந்தும். அதாவது, தமிழ் நாடு அரசியல் எக்கேடுகெட்டால் என்ன, தங்களது இலங்கை சார்ந்த அரசியல் போராட்டங்களுக்கு அந்த மாநில மக்களும் அரசியல் கட்சிகளும் ஆதரவு தர வேண்டும் என்பது மட்டுமே அவர்களது ஒரே குறிக்கோள்.

இதில், அவர்கள் அனைவரும் பிழைவிடும் காரியம் ஒன்று உள்ளது. தமிழ் நாடு மக்கள் இலங்கை இனப்பிரச்சினையில், தொடர்ந்து ஆதரவு தெரிவித்து- வந்தாலும், உள்நாட்டு தேர்தல்களில் அவர்கள் வெளி நாடு சார்ந்த எந்தவொரு பிரச்சினைக்கும் முக்கியத்துவம் கொடுத்து வாக்களித்ததில்லை. இனப்போரின் உச்சகட்ட காலத்தில், 2009 நாடாளுமன்ற தேர்தலில், அஇஅதிமுகவின் ஆதரவுடன் களமிறங்கிய மதிமுக நிறுவனர் வைகோ. தனது சொந்த தொகுதியான விருதுநகரில் 15,000 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்ததும் இதனையே குறித்தது. வைகோ, அன்றும் இன்றும் தன்னை இலங்கை தமிழர் பிரச்சினையுடன், குறிப்பாக விடுதலை புலிகள் அமைப்புடன் அடையாளப் படுத்திக் கொள்பவர்.

முதல்வர் ஸ்டாலின், அரசியலில் பழம் தின்று கொட்டையை துப்பியவர். கடந்த ஐம்பது ஆண்டு காலமாக அரசியலில் தொடர்ந்து செயல்பட்டு வரும் நாட்டின் மூத்த தலைவர்களில் அவரும் ஒருவர். இவரிடம் தலையையும் வாலையும் மாற்றிமாற்றி காட்டும், இலங்கை தமிழ்த் தலைமைகளின் விலாங்கு மீனை விளையாட்டு எடுபடவில்லை. எனவேதான், இங்கிருந்து பலரும் பிறர் அறியாமல் அவருக்கு எழுதும் கடிதங்களுக்கு பதில் கிடைப்பதில்லை. அவர்களை அவர் சந்திப்பதும் இல்லை.

### காவு கேட்பது...

இவை எல்லாம் இப்படி இருக்கும் வேளையில், நாடு தழுவிய அமைப்பு மலையகத் தமிழர்கள் மீது கரிசனை காட்டுவது நம்பிக்கை அளிப்பதாக இல்லை. மாறாக, அந்த இன மக்களை வைத்து, ருத்திரகுமாரன் வகையறா எந்தவிதமான அரசியல் செய்யமுற்படுகிறார்கள் என்ற கேள்வியும் கவலையுமே எழுகிறது.

அவர்களது இந்த முயற்சி, மலையகத் தமிழர்களின் அடுத்த தலைமுறையினரை குறிவைத்தே முன்னெடுக்கப்படுகிறது என்பது நிச்சயம். அதாவது, இலங்கையில் அடுத்து எப்போதாவது, தமிழர் தரப்பில் இனக் கலவரமோ கைகலப்போ ஏற்படுமேயானால், அதில் அவர்களுக்காக உயிர்துறக்க நூறு அல்லது ஆயிரக்கணக்கில் மக்கள் தேவை. இனப்போர் காலத்தை போல் தற்போதும் அவர்கள் மலையக இனத்தவரையே குறிவைத்து செயல்படுகிறார்களோ என்ற கவலை தோன்றுகிறது.

காரணம், இனப்போரின் கடைசி காலத்தில், கிளிநொச்சியில் இருந்து வெளியேறிய விடுதலை புலிகள் அமைப்பின் போராளிகளும் அவர்களின் தலைமையும், சென்று அடைக்கலம் புகுந்தது வன்னிப் பகுதியில். அங்கு மலையகத் தமிழர்களும் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்து வந்தார்கள். அவ்வாறு, கடைசிப் போரில் அவர்களும், குறிப்பாக அவர்களது இளைஞர்களும்கூட உயிரிழந்தார்கள் என்று கூறலாம். என்ன, அவர்களில் பலரும் தங்களை. இலங்கை தமிழ் இனத்தவர்கள் என்றே அடையாளம் காட்டிக்கொள்வதில் பெருமை பட்டார்கள். பாதுகாப்பாகவும் கருதினார்கள்.

### வாக்குரிமை, குடியுரிமை

நாடு சுதந்திரம் அடைந்த 1948 தொடங்கி, தொடர்ந்து வாக்குரிமையும், குடியுரிமையும் இழந்து, அறுபதுகளில் மலையகத்தில் ஜேவிபியின் அடக்குமுறைக்கு பயந்து வன்னிக்குக் குடிபெயர்ந்த அவர்களுக்கு, புதிய இன அடையாளம் ஒரு பாதுகாப்பு கவசமாகவே இருந்தது எனலாம். அதற்காக அவர்களையே தொடர்ந்து காவு கேட்பது, ஏற்புடையது அல்ல. மாறாக கண்டிக்கத்தக்கது.

இதைத்தான், இனப்போர் காலத்தில், கிழக்கு தமிழர்கள் விடயத்தில், காலம் சென்றாவது, கருணா பிள்ளையான் ஆகியோர் புரிந்து கொண்டு எதிர்க்கத் தொடங்கினர். அவர்களும் வழமைபோல், துரோகிகள் என்று முத்திரை குத்தப்பட்டனர். அந்த வகையில், தொண்ணூறுகளில் யாழ்பாணத்தை இனப்போரின் முக்கிய களமாக்கிய விடுதலை புலிகள் அமைப்பு, பின்னர் கிளிநொச்சிக்கு இடம் மாறியதும், கடைசி போரில், வன்னியில்

(6ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர்
Kalaikkathir

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# சைவ வழிபாட்டு மரபுகள்





சைவ சமய வழிபாட்டுமரபுகள் எங்கும் பரவலாகக் காணப்படுகின்றன ஆரம்ப கால கட்டங்களில் அச்சத்துடன் தான்கடவுனை வழிபட்டு வந்தனர். கடவுள் என்பவர் அச்சத்துடன் வழிபடவேண்டிய ஒருவராகக்காணப்பட்டார். இதனால் எமது முன்னோர்கள்கடவுளுக்கு சூலம் கல் போன்ற வடிவங்களைக் கொடுத்து பயபக்தியுடன் வழிபட்டு வந்தார்கள்.இத்தகைய வழிபாட்டு முறை இயற்கை வழிபாடு எனப்பட்டது. அது மட்டுமல்லாது இவ்வழிபாட்டில்அவர்கள் பெரிதும் இயற்கைக்கு முக்கியத்துவம் அழித்த செயற்பட்டார்கள். இயற்கைத்தெய்வங்களான சூரியன் வருணன,; இந்திரன, போன்ற தெய்வங்களையும் சில விலங்குகளை பசு,பாம்பு வழிபட்டார்கள். இயற்கை வழிபாட்டு முறை கிராமிய வழிபாடு என்றும் நாட்டார்வழிபாடு என்றும் அழைக்கப்பட்டது. இவ்நாட்டார் வழிபாட்டில ஆண் பெண் தெய்வங்களைபலியேற்கும் தெய்வங்களாக மக்களால் மிகவும் பயபக்தியுடன் வழிபட்டனர். இவ்வாறானதெய்வங்களிற்கு உதாரணமாககொத்திபிடாரி,ஐயனார்கண்ணகி போன்ற தெய்வங்களைக்குறிப்பிடலாம். இந்தத் தெய்வங்கள் பலி ஏற்கும் தெய்வங்களாக மட்டுமல்ல காவற்தெய்வங்களாகவும் விளங்கின. இவ்வாறு கிராமியத் தெய்வங்களிற்கான சடங்குகளின் போதுபலியிடுதல் உணவுப் பொருட்களைப் படைத்தல் ஆரவாரம் செய்தல் மிதித்தல் என்பனஇடம்பெறுகின்றன. காலமாற்றத் தின்விளைவாக இவ்வாறான வழிபாட்டு முறைகள் ஆலய வழிபாடுகளாகத் திரிபடைந்தன. கண்ணால் காணமுடியாத கடவுளின் உருவங்களை வணங்கி ஆலயத்தில் வைத்தவழிபடும் முறை ஆரம்பமாகியது. சைவ ஆலயம் என்பது சைவ சமயி ஒருவரின் உடலுக்குஒப்பிடப்படுகின்றது. மனிதர்கள் நாம் எவ்வாறு எமது வீட்டில் நீராடி அலங்காரம் செய்துஉணவுண்டு வாழ்கின்றோமோ அவ்வாறு ஆலயத்தில் கடவுள் நீராடல் அபிசேகம் என்றும் இறைவ-னிற்குஅழகுபடுத்ததல் அலங்காரம் என்றும் இறைவனுக்கு உணவு படைத்தல் நைவேதித்தல் என்றும்கூறப்படுகின்றது. ஆலயத்தை சுத்தம் செய்தல் இறைவனுக்கு மலர்மாலை கட்டுதல் இறைவனுக்குவிளக்கேறு;றுதல் என்பன இறைவனுக்கு செய்யும் தொண்டுகளாக சைவ சமய வழிபாட்டு மரபுகள்எடுத்துரைக்கின்றன. முன்னைய காலத்தில் இயற்கைவழிபாட்டில் இறைவனின் குறியீடா விளங்கிய உருவங்களை அன்று எமது சைவ ஆலயங்களில்காணக் கூடியதாக உள்ளது. அவை இறைவனின் வாகனங்களாகவும் தலவிரட்சங்களாகவும் காணப்படுகின்றன. பிற சமயங்களில்எல்லாம் வாரத்திற்கு ஒருநாள் பூசை வழிபாடுகள் நடைபெறும் வேளையில் எமது சமயத்தில் ஒவ்வொரு நாளும் இறைவனிற்கு பூசை வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்றும் ஒரு நாளிலேஆறுகாலப்பூசை வழிபாடுகள் நடைபெறும் ஆலயங்கள்பல உண்டு பொதுவாகப் பெரும்பாலான ஆலயங்களில் மூன்று காலப்பூசை வழிபாடுகள் இடம்பெற்றுவருகின்றன. இவ்வாறு ஆறுகாலப்பூசை வழிபாடுகள் இடம்பெறும் ஆலயமாக வல்லிபுர ஆழ்வார்ஆலயத்தினைக் குறிப்பிடலாம். அவ்வாறு பூசை வழிபாடுகள் இடம்பெறும் பொழுது அதனை மேற்கொள்பவர்களிற்காக சில ஒழுங்கு விதிகளும் உள்ளன. பூசையை மேற்கொள்பவர்உருத்திராக்கம், விபூதி ,பூ நூல் போன்ற சமய சின்னங்களை அணிந்திருக்க வேண்டும்அத்துடன் அவர்கள் கள்ளுண்ணல் புலால் உண்ணல் களவு செய்தல் போன்ற பஞ்சமா பாதகச்செயல்களில் ஈடுபடாதிருத்தல் வேண்டும். சிவன் ஆலயங்களில் பூசை செய்பவர்கள்அந்தணர்கள் என்றும் விஸ்னு ஆலயங்களில் பூசை செய்பவர்கள் பிராமணர்கள் என்றும்அழைக்கப்படுகின்றனர். ஆலயங்களின்வழிபாட்டு மரபுகளின் பூசை செய்பவர்களுக்கு மட்டுமல்ல அடியவர்களுக்கு அதற்கான வழிபாட்டுமரபுகள் வகுக்கப்பட்டுள்ளன. ஆலயத்திற்கு அடியவர்கள் திரு நீறு அணிந்து கொண்டு வருதல்வேண்டும் இறைவனை வழிபட வரும் போது வெறுங்கையடன் வராது பூ பழம் வெற்றிலைபோன்ற இறைவனைஅர்ச்சிக்கும் பொருட்களைக் கொண்டு வருதல் வேண்டும் அவற்றிற்கு மேலதிகமாக சுத்தமாக வருதல்வேண்டும் . இவ்வாறு சைவ வழிபாட்டு மரபில் பூசகர்களும் அடியவர்களும் கடைப்பிடிக்க வேண்டியஒழுக்கு விதி முறைகளை வேதங்களும் ஆகமங்களும்தெளிவாக விளக்குகின்றன. சைவ சமய வழிபாட்டுமரபில் தினசரி பூசைகள் தவிர சிறப்புப் பூசைகளும் இடம்பெறுகின்றன. தினசரி இறைவனுக்குசெய்யும் பூசைகளுக்கு மேலாக சிறப்புப் பூசைகள் முக்கிய இடம் பெறுகின்றன. அவ்வாறான சிறப்புப் பூசைகள் மாதம் மாதம் இடம்பெறுவதாகவும் இருக்கலாம் அல்லது ஒரு வருடத்தில் சிலதினங்கள் இடம்பெறுவதாகவும் இருக்கலாம். குறிப்பாக ஒவ்வொரு மாதமும் பிரதோசம் அமாவாசைபௌர்ணமி சஸ்டி ஆகிய தினங்களில் நடைபெறும் பூசைகள் தினசரி இடம்பெறும் பூசைகளில் இருந்து வேறுபடுகின்றன. அத்துடன் அவ்வாறான சிறப்பப் பூசைகள் தெய்வங்களுக்காக விசேடமாக இடம்பெறுகின்றன. முருகனின் திருவுருவம் உள்ள ஆலயங்களின் திருக்கார்த்திகை தினத்தன்றும்கந்த சஸ்டி தினங்களிலும் விசேட பூசை வழிபாடுகளைக் காணலாம். விநாயகரின் திரவுருவம் உள்ளஆலயங்களில் சதுர்த்தி ஆவணிச்சதுர்த்தி மற்றும் ஆவணித்திருவிழா ஆகியவை மிக விமரிசையாகஇடம் பெறுவதைக்காணலாம். அதுமட்டுமல்லாது சக்திக்கு விரதமிருந்து அடியார்கள் நோற்கும்கௌரிகாப்பு வரலட்சுமிக் காப்பு போன்ற நோன்பு தினங்களிலும் சரஸ்வதிப் பூசை தினங்களிலும்பூசை வழிபாடுகள் மிகச்சிறப்பாக இடம்பெறும். சிவனுக்குரிய சிவராத்திரி திருவெம்பா விரதகாலங்களில் சிவ ஆலயங்கள் விழாக்கோலம் பூணும். அவை எல்லாவற்றையம் விட பெரும்பாலானஆலயங்களில் ஒரு வருடத்தில் குறிப்பிட்ட மாதத்தில் சில தினங்களில் அவ்வலயத்தின்மகோற்சவம் கொண்டாடப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட சிறப்புப்பூசை மற்றும் மகோற்சவவழாக்களில் இறைவனிற்கு மேற்கொள்ளும் அபிசேக அலங்கார ஆராதனைகள் மிகவம் சிறப்பவாய்ந்தவை . இவ்வாறான வேளைகளில் இறைவன் ஆலயத்தின் உள்வீதி வெளிவீதி என்பவற்றை வலம்வருவார். இவ்வாறு இறைவன் வலம் வரும் போது அடியவர்கள் இறைவனுக்கு மலர் தூவியும் தங்களுதுவீடுகளிற்கு முன் நைவேத்தியங்களைப் படைத்தும் பக்தியோடு மனமுருகி நிற்பர் இதுவேதிருமந்திரத்தில் 'சலம்பூவொடுதூபம் மறந்தறியேன';. என்றும் யாவர்க்குமாம் ஒரு பச்சிலை என்றும் குறிப்பிடப்படுகின்றது.அவ்வாறு இறைவன் வலம்வரும் போது மேளம் சங்க நாதஸ்வரம் போன்ற இசைக்கரவிகளினால் இறைவனிற்க இனிமையூட்டும் இசை படைக்கப்படுகின்றது. மேலும் பூசைவழிபாடுகள் அனைத்தும்நிறைவேறிய பின்னர் அடியவர்களுக்கு நைவேத்தியங்கள் விபூதி சந்தனம் தீர்தம் போன்றவை பிரசாதங்களாக வழங்கப்படுகின்றன. இவ்வாறுஅளப்பதற்கரிய வழிபாடு மரபுகளைக்கொண்ட சைவ சமயத்தில் ஒழுகி வாழ்வில் உயர்நிலை அடைவோம். வாழ்க வையகம்விளங்குக சைவ நீதிஉலகமெல்லாம்.

சு. தரணியா
யா/வேம்படி மகளிர்கல்லூரி

# 20 லட்சம் ரூபா கப்பம் கோரிய வர்த்தகருக்கு கொலைமிரட்டல்

## சந்தேக நபர் கைது

வர்த்தகர் ஒருவருக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்து 20 லட்சம் ரூபா கப்பம் கோரிய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறான அச்சுறுத்தல் தொலைபேசி அழைப்புகள் கிடைத்தால் உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு பொலிஸார் பொது மக்களிடத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை மாலை இனந்தெரியாத நபர் ஒருவர் கையடக்கத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு 20 லட்சம் கப்பம் கோரி கொலை மிரட்டல் விடுத்ததாக வர்த்தகர் ஒருவர் முல்லேரிய பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதற்கமைவாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு அமைய சந்தேக நபர் முல்லேரியா அங்கொட, தெல்கஹவத்தை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். 51 வயதுடைய சந்தேக நபர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில் வாழும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ஒருவரின் உத்தரவின் பேரில் குறித்த நபர் வர்த்தகரை அச்சுறுத்தி பணம் பறிக்க முயற்சித்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்நிலையில் அண்மைக்காலமாக இதுபோன்று பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் குறித்த சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். மேலும் இவ்வாறான அச்சுறுத்தல் தொலைபேசி அழைப்புகள் கிடைத்தால் உடனடியாக அருகில் இருக்கும் பொலிஸ் நிலையத்தில் அறிவிக்குமாறு பொலிஸ் ஊடகப்பிரிவு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது. (05)

# கால்நடைகளை திருடுபவர்களுக்கு அபராதத்துடன் சிறைத் தண்டனை

நாட்டில் கால்நடைகளைத் திருடுபவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் மற்றும் ஒரு வருட கால சிறைத்தண்டனை வழங்கத் தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவின் கோரிக்கைக்கு அமைய விலங்குகள் நல சங்க பிரதிநிதிகள் குழுவுடன் விலங்குகள் நலச் சட்ட திருத்தங்கள் தொடர்பான கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை அமைச்சகத்தில் நடைபெற்றது.

இது தொடர்பில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கருத்து தெரிவிக்கையில் -

இந்தத் தீர்மானத்தை முன்னிட்டு விலங்குகள் நலச்சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டுவருமாறு கால்நடை அபிவிருத்தி பிரிவு அதிகாரிகளுக்கு வலியுறுத்தினார்.

இலங்கையில் மாடுகள் திருட்டு அதிகரித்து வருகின்ற நிலையில், தற்போது நடைமுறையில் உள்ள விலங்குகள் நலச்சட்டத்தின் கீழ் பசுக்கள் திருடிய குற்றத்திற்கான அதிகபட்ச அபராதம் 50 ஆயிரம் ரூபாய் ஆகும் ஆனால் சட்டத்தில் சிறைத்தண்டனை குறித்து குறிப்பிடப்படவில்லை என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், கறவை மாடு மற்றும் பசு மாடு திருடுபவர்களுக்கான தண்டனைகள் தொடர்பான சட்டங்களில் புதிய திருத்தங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். அநுராதபுரம் மாவட்டத்தில் நாளொன்றுக்கு குறைந்தது 26 லீற்றர் பால் கொடுத்த பசுவும் கடந்த வாரம் திருடப்பட்டு கொல்லப்பட்டுள்ளது.

இத்தகைய திருட்டு சம்பவங்களை கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாரிடம் பல முறை முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் அதிகளவிலான மாடுகள் திருடப்பட்ட மாவட்டமாக கம்பஹா மாவட்டம் காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

(05)

# ஊருக்கு இளைத்தவன்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

முள்ளிவாய்க்காலுக்கு பின் வாங்கியதும் அப்போதே பலதரப்பட்ட கேள்விகளை எழுப்பி இருந்தது.

அதாவது, யாழ்பாணத்தில் அமைதி நிலவட்டும். அங்கு வாழும் தமிழ் இளைஞர்கள் பெருவாரியாக மேலை நாடுகளில் தஞ்சம் புகுந்து, அங்கு, தடையின்றி உயர் கல்வி கற்று, சிறப்பான வேலைகளில் அமர்ந்து, கைநிறைய சம்பாதித்து அமைதியாக வாழ்க்கை வாழ்வார்களாம். அவர்களது குற்ற உணர்விற்கு தீனி போட, இங்குள்ளவர்கள் உயிர் விடவேண்டுமாம். தொடர்ந்து அவதிப்பட வேண்டுமாம். அதுதானே நடந்தது. என்ன, அதில் எண்ணற்ற வன்னி வாழ் மலையக தமிழர்களும் மாட்டிக்கொண்டார்கள். உயிரிழந்தார்கள்.

### காலத்தின் கட்டாயம்

மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரையில், காலஞ்சென்ற அவர்களது பெருந்தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலம் தொடங்கி தற்போது அவரது கொள்ளுப்பேரன் ஜீவன் தொண்டமான் காலம்வரை, அந்த மக்கள் உரிமைக்குப் போராடுவதைவிட உணவிற்கும் உறைவிடத்திற்கும் போராடுவதே தொடர் நிகழவாக இருந்து வருகிறது. இது இலங்கை தமிழ் இனத்தவரின் அடிப்படை எதிர்பார்ப்புகள் மற்றும் கோரிக்கைளில் இருந்தும் முற்றிலும் வேறுபட்டது.

இடைப்பட்ட காலத்தில் ஜீவன் தொண்டமானின் தந்தை, காலம்சென்ற ஆறுமுகன் தொண்டமான் தலைமையின் சிலபல தவறான முன்னெடுப்புகள் மற்றும் முன்னுதாரணங்களால், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி கிட்டத்தட்ட காணாமலே போய்விட்டது. அதனைக் கட்டிஎழுப்பும் ஜீவன் தொண்டமானின் முயற்சி எந்த அளவிற்கு வெற்ளிபெறுகிறது என்பதனை பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

இடைப்பட்ட காலத்தில், மலையகத் தமிழர்கள் அரசியலில் முன்னேறி தலைமைப் பொறுப்பை அடைந்த மனோ கணேசன் போன்றோருக்கும் இன முன்னேற்றத்தைவிட அவர்களது தனிப்பட்ட தேர்தல் அரசியலே முக்கியமாக இருந்து வருகிறது. தலைநகர் கொழும்பு மாவட்டத்தில், தனது மலையக தமிழ் வாக்காளர்களுக்கும் அப்பால், வெள்ளவத்தை வாழ் இலங்கை தமிழர் ஆதரவும் அது போன்றே முஸ்லீம், ஏன் ஒரு சில நூறு அல்லது ஆயிரம் சிங்கள வாக்காளர்களின் ஆதரவும் கிடைத்தால் மட்டுமே அவரால் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெற முடியும் என்பதே நிலைமை. எனவே, மனோ கணேசனிற்கு தன்னை தலைநகர் சார்ந்த தேசிய அரசியலில் முக்கியமான ஒரு தலைவராக காட்டிக்கொள்வது காலத்தின் கட்டாயம்.

மலையக தமிழர்கள் பிரச்சினை அவரது அரசியலில் ஓர் அலகு மட்டுமே. இதுவே, அந்த இன மக்களின் பிற அரசியல் தலைவர்களுக்கும் பொருந்தும். இந்தப் பின்னணியில், நாடு கடந்த தமிழர் அமைப்பும் மலையக தமிழர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதாக இடைபுக முயற்சிப்பது, வருந்தத்தக்கது. என்ன, ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்பார்களே, மலையக தமிழர்கள் விடயத்தில் அதுதான் நடைபெற்று வருகிறது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhppes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

## கொழும்பில்....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

ஆரம்பிக்கப்பட்டுஇடைநிறுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிக்கும்இயலுமைகிட்டியுள்ளது. 2024 வரவு செலவு திட்டத்துடன் அந்த திட்டங்களை ஆரம்பிக்க எதிர்பார்த்திருக்கிறோம்.

சில வேலைத்திட்டங்களில் மோசடிகள் நிகழ்கின்றன. அவ்வாறான செயற்பாடுகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சு முன்னெடுக்கும்.

அதேபோல் சிறு மற்றும் மத்திய தர வருமானம் ஈட்டும் மக்களுக்காககொழும்பில்05வீட்டுத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதற்காக மொத்தமாக 350 டொலர் மில்லியன்கள் செலவாகும். ஜனாதிபதியின் அண்மைய சீனாவிற்காக விஜயத்தின் போது ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைய, 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை கிடைத்துள்ளன. இத்திட்டத்தின் கீழ் 2500 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

அத்தோடு கொழும்பில் நீர் நிரம்புவதை தடுப்பதற்கு தாழ் நில அபிவிருத்தி அதிகார சபையினால் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. கடல் தாவரங்கள் மற்றும் சதுப்பு நிலங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைளும்எடுக்கப்பட்டுள்ளன.

வெள்ளப் பாதுகாப்பிற்கான மக்களிடத்திலிருந்து பெறப்பட்ட காணிகள் அழிவடைகின்றன. காணிகளைகையகப்படுத்தும்போது வழங்கப்படவேண்டியநட்டயீடுகளும் சிலருக்குவழங்கப்படவில்லை.அந்த நிலைமைக்கு மாறாக கொழும்பு நகரில் பிரதான காணிகளை பெற்றுக்கொள்ளும்போதுஅறிவியல் முறைமையொன்றை பின்பற்ற எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கும் பயணத்தில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு உயரிய பங்களிப்பை வழங்கும்.

## கீரிமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணைப்புக் குழுக் கூட்டத்தில் நீண்ட விவாதம் இடம்பெற்றது. இந்த விவாதத்தின்போது,

தனியாரிடம் இருந்து சுவீகரிக்கப்படாத காணிகள் ஜனாதிபதி மாளிகைக்கு எவ்வாறு வழங்கப்பட்டதுஎன்றுநாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார். நில உரிமையாளர்களிற்கான இழப்பீடு வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த தெல்லிப்பளை பிரதேச செயலாளர், முதல்கட்டமாக அந்தக் காணிகளை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்க அனுமதி கோரப்பட்டாலும் நில உரிமையாளர்களிற்கும் அதற்கான இழப்பீடு வழங்கப்படும் என்றுஉறுதியளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அந்த கட்டடத்தை மாகாண சபைக்குத் தருமாறு கோரினோம். தரவில்லை.அதனை யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திடமாவது கொடுங்கள். அவர்கள் வேண்டாம் என்றால் தனியார் தொடர்பில் பரிசீலிக்கலாம். மாறாக நில உரிமையாளரின் ஒப்புதல் இன்றி பிடுங்கிய நிலத்தை எவ்வாறு இன்னுமொருவருக்குவழங்குவது? என வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் கேளவி எழுப்பினார்.

அங்கே உள்ள நிலத்தின் உரிமையாளர்கள் பலர் நிலத்தைத் திருப்பித் தருமாறு கோருகின்றனர். அத்தோடு அங்கே இருந்த மத அடையாளங்களைப் பாதுகாத்து தாருங்கள் என ஆறு. திருமுருகன் கோருகின்றார். நீங்களோ அந்த நிலத்தை வீதி அபிவிருத்தி அதகார சபைக்குவழங்கஒப்புதல்தாருங்கள் என இன்றுதான் கோருகின்றீர்கள். இருந்தபோதும் கடந்த வாரமே தனியார் பல்கலைக் கழகத்திற்கு அதனை வழங்க ஒப்பந்தம் எழுதப்பட்டுவிட்டதாகப்படங்களுடன் செய்தி வந்துள்ளது. இது ஒரு ஏமாற்றுவேலைஎனநாடாளுமன்ற உறுப்பினர்சி.சிறிதரன்தெரிவித்தார்.

அவ்வாறு எந்த தனியார் பல்கலைக்கழகத்திற்கும் இதுவரை அந்த இடம் வழங்கப்படவில்லை என நகர அபவிருத்தி அதிகார சபையின் பிரதிநிதி தெரிவித்தார்.

குறுக்கிட்ட ஆளுநர், தற்போது நகர அபவிருத்தி அதிகார சபையினருக்கு அந்தக் காணிகளை வழங்குவதற்கான அனுமதியைத்தானே கேட்கிறார்கள். அதனை வழங்குவோம் என்றார்.

ஆனால், அதற்கு அனுமதிக்க முடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் திட்டவட்டமாகத் தெரிவித்தார். இந்த நிலம் காணி சுவாகரிப்புச் சட்டத்தின்கீழ்நிலஉரிமையாளரின் ஒப்புதல் இன்றி 38ஏ இன் கீழ் எடுக்கப்பட்டதல்லவா என அவர் கேள்விஎழுப்பினார். தெல்லிப்பளை பிரதேச செயலாளர் சிவசிறி "ஆம்" எனப் பதிலளித்தார்.

சட்டப் பிரிவு 38 ஏயின் கீழ் பாதுகாப்புத் தரப்பினருக்கு மட்டுமே நிலத்தைச் சுவீகரிக்க முடியும், அப்படியிருக்கும்போது நகர அபிவருத்தி அதிகார சபைக்கு நிலத்தை வழங்கும் கோரிக்கைக்கு எப்படி அனுமதி வழங்க முடயும்? இதன் தொடக்கமே பிழையாக இருப்பதனால் இந்த அனுமதியை வழங்க முடியாது என்றார்.

இதனையடுத்து தலைமை அலுவலகத்துடன் இது தொடர்பில் ஆலோசிக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபை பிரதிநிதிக்கு ஒருங்கிணைப்புக் குழு அறிவுறுத்தியது.

# இதுதான் கடைசி வாய்ப்பு ரணில் நேற்று வலியுறுத்து

தகவல்தொழில்நுட்பத்துறையில் முன்னேறுவதற்கான கடைசி வாய்ப்பு இதுதான் என்று ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவலியுறுத்தினார்.

கொழும்புமொனார்க்இம்பீரியல் ஹோட்டலில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற 'தேசிய தகவல் தொழில்நுட்ப விருது வழங்கும் விழா - NBQSA 2023' நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

1980களின் தொடக்கத்தில் நான் கல்வி அமைச்சராக இருந்தபோது தகவல் தொழில்நுட்பம் பற்றி பேசினோம்.அப்போதுஇலங்கையில் அதிகம் அறியப்படாவிட்டாலும், சின்க்ளெயார் நிறுவனத்தின் சின்க்ளெயார் அவர்களைச் சந்திக்க வாய்ப்பு கிடைத்தது.

பின்னர் நம் நாட்டு பாடசாலைகளுக்கு முதலாவது சின்க்ளெயார் கணினிகள் கொண்டு வரப்பட்டன. அதன்படி, தகவல் தொழில்நுட்பத்துறையில்பணிகளை மேம்படுத்துவதற்காக கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப கவுன்சில் தொடங்கப்பட்டது.

அந்த நேரத்தில்தான் பேராசிரியர் சமரநாயக்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினி மத்திய நிலையத்தை தொடங்கினார். அப்போது இந்தியா தகவல் தொழில்நுட்பத்தில் ஆர்வம் கொண்டிருந்தது.ஆனால்எங்களிடம் இல்லாதபிரச்சினைகள்அவர்களுக்கு இருந்தன. உதாரணமாக, கணினிகளை இறக்குமதி செய்ய எங்களிடம் போதுமான அந்நியச் செலாவணி இருந்தது. ஆனால் அதற்கான திறன் அவர்களிடம் இருக்கவில்லை.

இதற்கிடையில், கல்வித் துறையை மறுசீரமைக்க சீனா தயாராக இருந்தது. 1991 இல், கைத்தொழில், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சராக நான் இந்தியாவுக்கு விஜயம் செய்தேன். நான் பெங்களூர் சென்றிருந்தேன். அங்குதான் இந்தக் கைத்தொழில் தொடங்கியது. அவர்களிடம்இரண்டு பில்லியன் டொலர் பெறுமதியான ஏற்றுமதி இருந்தது.

இலங்கையில் தகவல் தொழில்நுட்பத்தை ஆரம்பிப்பது குறித்து நாங்கள் ஆராய்ந்தோம். அப்போது சீனாவும் தகவல் தொழில்நுட்பத் துறையில் கவனம் செலுத்தி வந்தது. துரதிர்ஷ்டவசமாக, அந்த வாய்ப்பை நாங்கள் தவறவிட்டோம். அந்த நாடுகள் முன்னோக்கி நகர்ந்தன. இதைத் தொடர்ந்திருந்தால், இன்று இருக்கும் பொருளாதார நெருக்கடியை நாம் சந்திக்க வேண்டியிருக்காது.

இருப்பினும், இப்போது வருத்தப்படுவதில் அர்த்தமில்லை. அவை நடந்து முடிந்துவிட்டன. இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டது போல், இதுவே எமக்கான கடைசி வாய்ப்பு. எனவே நாம் இப்போது தகவல் தொழில்நுட்பத்துடன் முன்னேற தயாராக வேண்டும். இல்லாவிட்டால் இந்த வாய்ப்பை என்றென்றும் இழக்க நேரிடும்.

ஒரு நாடாக முன்னோக்கிச் செல்ல, நாட்டின் வர்த்தக நிலையை எமக்கு சாதகமாக அமைத்துக்கொள்வதோடு, ஏற்றுமதியிலும் தன்னிறைவாக இருக்க வேண்டும். மேலும் நம்மிடம்ஆடைத்தொழில்உள்ளது. நாம் தொடர்ச்சியாக தேயிலை மற்றும் ஆடைக் கைத்தொழில் துறை மீது தங்கியிருக்க முடியாது. புதிய பொருளாதார கட்டமைப்புத் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டுக்குள் புதிய பொருளாதாரத்தை கட்டமைக்க வர்த்தக தன்னிறைவை தக்கவைத்துக்கொள்ள வேண்டும். உலகின் எந்தவொரு நாடுடனும் போட்டியிடக்கூடிய வகையிலான பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும்.

அதன்போது பசுமை பொருளாதாரம் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி என்பன தீர்மானமிக்க காரணிகளாக அமையும். பசுமை மற்றும்வலுசக்திபொருளாதாரத்திற்கு அவசியமான சாத்தியங்கள் நாட்டில் அதிகமாக உள்ளன. அதேபோல்விரைவில்நாம்டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி நகர வேண்டும். புதிய பொருளாதார வேலைத்திட்டத்தின் ஆரம்பம் குறித்து அடுத்த வரவு செலவு திட்ட உரையில் குறிப்பிடுவோம். அதேபோல் அதற்கான சட்டங்களை கொண்டுவரவும் எதிர்பார்த்துள்ளோம்.

1970களின் ஆரம்பக் காலத்தில் நாட்டில் சட்டரீதியாக அறிமுகப்படுத்தப்பட்டபொதுவுடமை பொருளாதார கொள்கையொன்று காணப்பட்ட போதிலும் 1977களில் வர்த்தக பொருளாதாரம் நடைமுறைக்கு வந்ததால் அந்தச் சட்டம் இரத்தாகியது.

இருப்பினும் இம்முறை ஒரு அடியை முன்னோக்கி வைக்கும் வகையில் போட்டித்தன்மை மிக்க பசுமை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரங்களை கட்டமைப்பதற்கான சட்டங்களை உருவாக்க எதிர்பார்த்துள்ளோம். சட்டம் மட்டும் போதுமானதல்ல. டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

அதனை தனியாக செய்யும் அளவிற்கு அரசாங்கத்திடம் நிதி இல்லை. அதேபோல் மனித மூலதனமும் பெரும் பிரச்சினையாகியுள்ளது. டிஜிட்டல் பொருளாதாரத்திற்காக பயிற்றுவிக்கப்பட்ட மனித வளம் எமக்கு அவசியப்படுகின்றது. அதனால் அந்த துறையில் பயிற்றுவிக்கப்பட்ட பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகள் உள்ளிட்ட திறன்மிக்க மனித வளத்தைகட்டியெழுப்பவேண்டும்.

இது நாம் முகம்கொடுக்க உள்ள பிரதான சவால்களில் ஒன்றாக அமையும். அதேபோல் தகவல் தொழில்நுட்பத் துறைக்குள் மனித மூலதனத்தை எவ்வாறு அதிகரிக்க முடியும் என்பது குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

அதற்காக நமக்கான தனிப்பட்ட நிதியம் ஒன்றை உருவாக்க வேண்டும். இல்லாவிட்டால் வெளிநாட்டு முதலீட்டாளர்களை அழைக்க நேரிடும். இந்த வேலைத்திட்டங்களுடன் நாம் முன்னோக்கி செல்ல வேண்டும். தகவல் தொழில்நுட்பத் துறையில் நாமும் முத்திரை பதிக்க வேண்டும்.

இலங்கைஇந்தியாவுக்குஅருகில் அமைந்துள்ளது. இந்தியாவிற்குள் தகவல் தொழில்நுட்பம் வளர்ச்சி கண்டுவருகிறது. அதனால்எவ்வாறு பயனடைய முடியுமென்பதை நாம் சிந்திக்க வேண்டும். அந்த நோக்கத்திற்காக நாம் சிறந்த முறையில் செயற்பட வேண்டும். நாடுஎதிர்கொண்டுள்ளபொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டும் வலுவடைய வேண்டுமெனில் டிஜிட்டல் மாற்றமொன்று அவசியம். அவ்வாறு இல்லாமல் நாம் உலகத்துடன்பயணிக்கமுடியாது.

டிஜிட்டல் மாற்றத்துக்கு அவசியமான திட்டத்தை அரசாங்கம் தயாரிக்க வேண்டும். தனியார் துறையும் அந்த வேலைத்திட்டத்துடன் முன்னோக்கி பயணிக்கலாம். உதாரணமாக 1977 களில் ஆடைத் தொழிற்சாலைகள் வாயிலாக எமக்கு வர்த்தகம் ஒன்று இருக்கவில்லை. இருப்பினும் 10 15 வருடங்களில் அந்த துறையில் பெரும் வளர்ச்சி கண்டோம். புதிய தொழில்நுட்பத்துடன் பயணிக்கும் போது மாற்றங்கள் ஏற்படக்கூடும் என்பதால் எமது பயணத்தை துரிதப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

இங்கு விருது பெற்றவர்கள் சிலருடன்பேசும்போதுமகிழ்ச்சியாக இருந்தது. முன்னோக்கிச் சென்று வியாபாரத்தை வளர்த்துக்கொள்வதே அவர்களின் தேவையாக உள்ளது. இதற்காக வங்கிகளிடத்தில் எவ்வாறு நிதியைப் பெறலாம் என்றும் எவ்வாறு வர்த்தக வியாபாரமாக மாற்றியமைப்பது என்பது குறித்தும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

எவ்வாறாயினும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். தற்போதும் சிலர் அதற்கான பிரவேசத்தை ஆரம்பித்துள்ளனர். அடுத்த வருடத்தில்அனைவரும்இதனுடன் இணைந்துகொள்வார்கள் என நம்புகிறேன் என்றார்.



# நெடுந்தீவிற்கான கடல் பயணத்தில் ஊரவரிற்கான முன்னுரிமை மறுப்பு

## சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு; உடன் நடவடிககை என்கிறார் அமைச்சர்

ந.லோகதயாளன்.

குறிகாட்டுவான் இறங்கு துறையில் இருந்து பயணிக.கும் பயணிகளில் நெடுந்தீவு மக்களிற்கு வழங்கும் முன்னுரிமை தற்போது மறுக்கப்படுகின்றது என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் குற்றஞ்சாட்டினார். யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு ஆளுநர் பி.எம்.எஸ்.சாள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே இதனைத் தெரிவித்தார்.

''குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்து பயணிக்கும் பயணிகளில் நெடுந்தீவு மக்களிற்கு வழங்கப்படும் முன்னுரிமை தற்போது மறுக்கப்படுகின்றது. இதற்கு நயினாதீவில் உள்ள விகாராதிபதியின் படகுப் பயணமே முக்கிய காரணம். அத்தோடு அந்தப் படகில் பயணிப்பவர்களிற்கு தேரரே சிட்டை விநியோகம் செய்கின்றார் எனச் சுட்டிக்காட்டினார்" இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்த நெடுந்தீவுப் பிரதேச செயலர், "நயினாதீவு தேரரின் படகு வந்தால் 350 பேரை இறக்கியும் பின்பு 350 பேரை ஏற்றும் வரையிலும் ஏனைய படகுகள் நடுக் கடலில் நிற்கும் நிலையே காணப்படுகின்றது. இதனால் நெடுந்தீவு மக்கள் அந்தரிக்கின்றனர். சங்கமும் அதற்கு நடவடிக்கை எடுப்பதில்லை" எனச் சுட்டிக் காட்டினார்.

பதிலளித்த அமைச்சர் எவர் என்ன செய்தாலும் நெடுந்தீவுப் பயணிகளிற்கு முன்னுரிமை என்பதில் மாற்று கருத்துக் கிடையாது. இது தொடர்பில் உடன் நேரில் வந்து பார்வையிட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## திருடர்களைப் பாதுகாப்பதற்கே நாட்டில் ஸ்மார்ட் வேலைத்திட்டம்

### சமிந்த விஜயசிறி சாடல்

சுகாதாரத்துறையை சீரழித்து தரமற்ற மருந்துகளைக் கொண்டு வந்து மக்களைக் கொலை செய்த கெஹலிய ரம்புக்வெல்லவை பாது காத்து தற்போது சுற்றாடல் அமைச்சை வழங்கியுள்ளனர்.

இதுவே ஜனாதிபதி ரணிலின் ஸ்மார்ட் மயமாக்கல். இதன் மூலம் திருடர்களை பாதுகாக்கிறார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

ஐக்கிய தேசிய கட்சியின் மாநாட்டின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதிய கறுப்பு நிற ஜெர்சி ஒன்றை அணிந்து கொண்டு ஸ்மார்ட் நவீனமயமாக்கல் தொடர்பில் கருத்துத் தெரிவித்தார். நாட்டில் உள்ள திருடர்களைப் பாதுகாப்பதாலும், நாட்டை வங்குரோத்து அடைய செய்தவர்களைப் பாதுகாப்பதாலும் ரணில் விக்கிரமசிங்க இன்று ஸ்மார்ட் ஆக மாறியுள்ளார். சுகாதாரத்துறையைச் சீரழித்து தரமற்ற மருந்துகளைக் கொண்டு வந்து மக்களைக் கொலை செய்த கெஹலிய ரம்புக்வெல்லவைப் பாதுகாத்து தற்போது சுற்றாடல் அமைச்சை வழங்கியுள்ளார். இதுவே அவரது ஸ்மார்ட் மயமாக்கல். திருடர்களைப் பாது காக்கின்றார். திருட்டில் ஈடுபட்டு வங்குரோத்து அடைந்ததன் பின்னர் அந்த அமைச்சை வழங்குகின்றார். இதுவே அவரது ஸ்மார்ட் மயமாக்கலின் நோக்கம் என நாம் நினைக்கிறோம். - என்றார். (05)

## டொல்பின் வகை மீன்கள் சில கரையொதுங்கின

மட்டக்களப்பு வாகரை காயான்கேணி கடலில் டொல்பின் வகை மீன்கள் சில கரையொதிங்கியிருந்தன. புதன்கிழமை காலை வழக்கத்துக்கு மாறாக இந்த வகை மீன்கள் ஆழ் கடல் பகுதியில் இருந்து கடற்கரையை நோக்கி வந்திருந்ததாகவும், அவற்றை மீண்டும் கடலில் விடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக வாகரை பிரதேச செயலாளர் டி.அருணன் தெரிவித்தார்.

இதற்காக கடற்றொழில் திணைக்களம், கஜீவத்தை கடற்படையினர், நாரா, கிரான், அம்பாறை வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பிரதேச மீனவ சங்கங்கள் இணைந்து அவற்றைப் பாதுகாப்பாக கடலில் விடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, காயப்பட்ட டொல்பின்களுக்கு ஊசி மூலம் மருந்தேற்றப்பட்டு பாதுகாப்பாக சுமார் ஒரு கிலோ மீற்றருக்கு அப்பால் கடலில் விடப்பட்டது. கடலில் ஏற்பட்ட விபத்து காரணமாக அவை காயமடைந்த நிலையில் அவை கரையொதுங்கியிருக்கலாம் என அங்கு வருகை தந்த அதிகாரிகளால் ஊகம் தெரிவிக்கப்பட்டது. (05)

## வைத்தியசாலையினுள் போதையில் அட்டகாசம்

### இருவர் கைது

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் மது போதையில் நுழைந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்பட்டு உள்ளே செல்ல முயன்ற இருவர் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

நோயாளி ஒருவரைப் பார்வையிடுவதற்காக வைத்தியசாலை வளாகத்திற்குள் மது போதையில் அத்துமீறி நுழைந்த இருவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்பட்டு வளாகத்துக்குள் உள்நுழைந்தனர்.

விடயம் தொடர்பில் வைத்தியசாலை பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவலளிக்கப்பட்டு இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் இருவரையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (05)



# பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உரிய தீர்வு கிடைக்கவேண்டும்

## வடிவேல் சுரேஷ் தொழில் திணைக்கள ஆணையாளரிடம் வலியுறுத்து



கேகாலை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்குகின்ற கம்பனியில் பெருந்தோட்டத் தொழிலாளர்களால் தொடர்ந்தும் நடத்தப்படுகின்ற அஹிம்சை வழி போராட்டம் தொடர்பில் பல சுற்றுவட்ட பேச்சுகள் நடைபெற்றன.

அந்த வகையில் கொழும்பு தொழில்திணைக்களத்தில்தொழில் ஆணையாளர் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் –

கேகாலை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்குகின்ற கம்பனிகளில் பெருந்தோட்ட தொழிலாளர்களின் லாப கொடுப்பனவு தொடர்பான பிரச்சினையை மத்தியஸ்தர் சபையின் ஊடாகத்; தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடுமேற்குறிப்பிட்ட தோட்டங்களில் தொழில் புரியும் தொழிலாளர்கள் தொழிலுக்கு சென்றும் வேலை வழங்காமல் பெருந்தொட்ட நிறுவனத்தால் வேலை நிறுத்தப்பட்டிருந்த 21 நாள்கள் தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்கு ஒரு நாள் வேதனம் ஆயிரம் ரூபா கணக்கிட்டு 21 ஆயிரம் ரூபா கொடுக்கப்பட வேண்டும் என்பதைத் தொழில் ஆணையாளர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பில் தொழில் ஆணையாளர் அதிகாரிகள் உரிய தோட்டங்களுக்கு விஜயம் செய்து உண்மைத் தன்மையை ஆராய்ந்து உடனடியாகக் கொடுப்பனவை வழங்குவதற்கு சிபாரிசு செய்வதாக தொழில் ஆணையாளர் உறுதி அளித்தார்.

மேலும், 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐந்தாம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு இணங்க பெருந்தோட்டத் தொழிலாளிஒருவர்ஒருநாளைக்கு 8 மணித்தியாலம் வேலை செய்தால் கட்டாயமாக ஒரு நாள் வேதனமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும்.

வர்த்தமானியில் கிலோகிராம் தொடர்பில் எதுவித அறிக்கையும் இல்லை என தொழில் ஆணையாளர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கும் தொழிற்சங்க ரீதியில் நமக்கும் கிடைக்கப்பெற்ற பாரியதொரு வெற்றியாக நான் இதனை காண்கின்றேன் எனக் கருத்துரைத்தார். (05)

# மலேசியாவில் வாகன விபத்தில் இலங்கை தம்பதியர் உயிரிழப்பு



கடந்த சனிக்கிழமை மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையைச் சேர்ந்த தம்பதியினர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்களது குடிருப்பு பகுதிக்கு அருகில் தம்பதியினர் ஓட்டிச்சென்ற கார் மற்றுமொரு காருடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிது. இந்த விபத்தில் தம்பதியினர் உயிரிழந்துள்ளதுடன், காரில் இருந்த அவர்களின் பிள்ளை உயிர் பிழைத்துள்ளது.

உயிரிழந்தவர்கள் 33 மற்றும் 35 வயதுடையவர்கள் எனவும், மலேசியாவில் மென்பொருள் பொறியியலாளர்களாகப் பணியாற்றியவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (05)

# பெண்களின் நிர்வாணப் படங்களை பகிர்ந்த சுகாதார ஊழியர் கைது

பெண்களின் நிர்வாண புகைப்படங்களைப் பகிர்ந்ததாக குற்றம்சாட்டப்பட்ட சுகாதார ஊழியர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பதுளை கந்தகொல்ல பிரதேசத்தில் வசிக்கும் 34 வயதுடைய நபர் ஆவார்.

குறித்த நபர் தொடர்பில் பெண் ஒருவர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸாரால் விசாரணைகள் நடத்தப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# புலம்பெயர் வளங்கள் நிலையத்தை அமைக்க நியூஸிலாந்திடமிருந்து உதவி

புலம்பெயர்வோருக்கும் மீளவும் எமது நாட்டுக்கு வருகை தருகின்றபுலம்பெயர்ந்தோருக்கும் மற்றும் புலம்பெயர்வதற்கு எதிர்பார்க்கின்றவர்களுக்கும் வெளிநாடுகளில் பயணிக்கும் போது, தொழில் புரியும் போது மற்றும் வசிக்கும் போது எதிர்கொள்ள நேரிடுகின்ற இடர்கள் மற்றும் சவால்களைக் குறைத்துக் கொள்வதற்கு புரிதலுடன் தீர்மானமெடுப்பதற்கு இயலுமை வழங்குவதற்காக, போதியளவான, காலத்தோடு தழுவியதாகவும் மற் றும் நம்பகமான தகவல்கள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்காக கிழக்கு மாகாணத்தில் புலம்பெயர் வளங்கள் நிலையத்தை நிறுவுவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக நியூஸிலாந்து அரசு தமது உடன்பாட்டை தெரிவித்துள்ளது. அதற்கமைய, நியூஸிலாந்தின் வியாபாரம், புத்தாக்கம் மற்றும் தொழில் அமைச்சின் மூலம் புலம்பெயர் கொள்கை அபிவிருத்தி சர்வதேச நிலையத்தின்மூலம்முன்மொழியப்பட்டுள்ள செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 350,000 நியூஸிலாந்து டொலர்களை வழங்குவதற்கு அந்நாட்டு அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள நிலையத்தை நிறுவுவதற்காக நியூஸிலாந்தின் புலம்பெயர் கொள்கை அபிவிருத்தி சர்வதேச நிலையம் மற்றும் எமது நாட்டின் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்காக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச் சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (05)

# கூட்டணி அரசியல் தொடர்பாக ஜனாதிபதிக்குத் தெளிவில்லை

## நாமல் ராஜபக்ஷ கிண்டல்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கூட்டணிஅரசியல்தொடர்பாகவிளங்கிக் கொள்ள வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டணி அரசாங்கமொன்றில், ஏதேனும் முக்கியமான தீர்மானமொன்று எடுக்க வேண்டுமாக இருந்தால் கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசிக்கப்படும்.

ஆனால், கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் கலந்தாலோசிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு கட்சியின் செயலா ளர் உள்ளிட்ட பலரால் முன் வைக்கப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுனவுக்கும் சுதந்திரக்கட்சிக்கும்இடையில்எந்தவித முரண்பாடும் கிடையாது. எனினும், பதவிகள் மாற்றமடைவதால் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டுமன்றி சஜித் பிரேமதாஸ, சரத்பொன்சேகா, அநுரகுமார திஸாநாயக்கவையும் அன்று நாம் அழைத்தோம். இவர்கள் யாரும் வரவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான் இந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இதற்கான கௌரவத்தை நாம் அவருக்கு கொடுக்க வேண்டும்.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டணி அரசியல் தொடர்பாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தின்போதும் இரண்டு தலைவர்களும் வெள;வேறாக செயற்பட்ட காரணத்தினால்தான் நாடு வீழ்ச்சியடைந்தது.

இவ்வாறு தற்போது இடம்பெற்றுவிடக்கூடாது என்பதற்காகத்தான், பேசித் தீர்மானங்களை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கிறோம். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (05)

# சிறுநீரக நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கும் இயந்திரம் பதுளை போதனாவுக்கு கையளிப்பு

## ஐ.ஓ.சி. நிறுவன நிதி அனுசரணையில்

லங்காஐஓசிநிறுவனத்தின்நிர்வாகப்பணிப்பாளர் தீபக் தாஸின் உதவியுடன் பதுளை போதனா வைத்தியசாலைக்கு சிறுநீரக நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும்னுயைடலளளைஇயந்திரமொன்று இன்று கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானால் கையளிக்கப்பட்டது.

இதன் போது கருத்து தெரிவித்த செந்தில் தொண்டமான் –

ஐஓசி நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் தீபக் தாஸின் உதவியுடன் இந்த இயந்திரத்தை நன்கொடையாக வழங்கி வைத்தோம்.

இந்த இயந்திரம் சிறுநீரக நோயாளிகளை குணப்படுத்துவதற்கு அவசர தேவையாக இருந்தது என்றும் செந்தில் தொண்டமான் கூறியுள்ளார்.

இந்நிகழ்வில், இ.தொ.கா.வின் மூத்த தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.வி.சென்னன் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (05)



# கல்லூண்டாய் குடியேற்றத்திட்ட மக்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கி வைப்பு

யாழ்ப்பாணம் – சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்லூண்டாய்வெளிகுடியிருப்புத்திட்டமக்களுக்கான காணி உரிமை பத்திரம் கையளிக்கும் நிகழ்வு புதன்கிழமை இடம்பெற்றது.

புதன்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் கல்லூண்டாய் வெளியில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அலுவலகத்தில் நவாலி கிழக்கு மற்றும் மேற்கு கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 54 குடும்பங்களுக்கான காணி உரிமைப் பத்திரம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தவால் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ்ப்மாண மாவட்ட அரசாங்க அதிபர் சிவபாலசுந்தரன், காணி மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீமோகன், மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயந்தன் குணதிலாக மற்றும் துறைசார் அதிகாரிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (05)




JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஓட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
134, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர்
Kalaikkathir

# குடாநாட்டு சட்டவிரோத மதுசாலைகள் விவரம் கோருகின்றார் வடக்கு ஆளுநர்

யாழில் இயங்கும் சட்டவிரோத மதுபான சாலைகள் மற்றும் அவை குறித்தமுழுமையானவிவரங்களைச் சமர்ப்பிக்குமாறுவடமாகாணஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

சட்டவிரோத மதுபான சாலைகள் தொடர்பில்ஏன்இன்னும்நடவடிக்கை எடுக்கவில்லை. நீங்கள் இவ்வாறு சட்ட விரோத மதுபான சாலைகளுக்கு ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் அரசாங்கத்துக்கு வருகின்ற வருமானத்தை இழக்கச் செய்கின்றீர்கள்.

அத்தோடு அதிகாரிகளுக்கும் ஒத்துழைப்புவழங்குவதில்லை. இந்த கூட்டத்திற்கு கூட திணைக்களத்திற்கு பொறுப்பானவர்சமுகமளிப்பதில்லை.

உதவி அத்தியட்சகர் தான் ஒவ்வொரு முறையும் இந்த கூட்டத்திற்கு வருகின்றார். எனவே சட்ட விரோத மதுபானசாலைகளை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு உங்களுக்கு உள்ளது. அதை நீங்கள் செயற்படுத்த வேண்டும்.

அடுத்த முறை நீங்கள் கூட்டத்திற்கு வரும்போது இவ்வளவு காலத்தில் எத்தனை சட்டவிரோத மதுபான சாலைகளை கட்டுப்படுத்தி இருக்கிறீர்கள் என்ற விவரத்துடன் வரவேண்டும். - என வடமாகாண ஆளுநர் மதுவரித்திணைக்கள உத்தியோகத்தருக்கு பணிப்புரை விடுத்தார். (05)



## ஆசிய பரா விளையாட்டுப் போட்டி 2023 இல் இலங்கைக்கு வெள்ளி

சீனாவில் இடம்பெற்றுவரும் 2023 ஆம் ஆண்டுக்கான ஆசிய பரா விளையாட்டுப் போட்டியில், இலங்கை வீரர் சமித துலான் கொடிதுவக்கு ஈட்டி எறிதல் போட்டியில் வெள்ளி பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

ஆண்களுக்கான ஈட்டிஎறிதல் போட்டியில் கலந்து கொண்ட சமித துலான், 64.09 மீற்றர் தூரம் ஈட்டி எறிந்து வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## விபத்துகளை ஏற்படுத்தும் சீரற்ற வீதிக் குறியீடுகள்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின்நகர்பகுதிதவிர்ந்தஏனையபகுதிகளில் வீதிக் குறியீடுகள் சீரற்று காணப்படுவதால் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தன் முதல் பூநகரி, சங்குப்பிட்டி பாலம் வரையிலும், பரந்தன் முதல் முல்லைத்தீவு வரையிலும்உள்ள'வீதிவளைவுகள், பாதசாரி கடவை, பெயர் பலகைகள் ' உள்ளிட்ட முக்கிய வீதி குறியீடுகள் சேதமடைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் எனவும் குறிப்பாக விபத்துக்கள் சம்பவிப்பதற்கும் இது காரணமாக அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர்இவ்விடயம்குறித்துஉடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)

## நவம்பர் முதல் வாரத்திலிருந்து தொழிற்சங்க போராட்டங்கள்

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் முடிவு

நவம்பர், முதல் வாரத்திலிருந்து தொடர் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

வெளிநாடு செல்ல எதிர்பார்த்திருக்கும் வைத்திய அதிகாரிகளை தக்கவைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத்தவறியமைக்குஎதிர்ப்புத் தெரிவித்தே அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், தொழிற்சங்க நடவடிக்கையைஅறிவித்துள்ளது.

அதற்கிணங்க, எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் விஜபி சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான நடமாடும் அம்புலன்ஸ் சேவைகளில் இருந்து மறு அறிவிப்பு வரும் வரை விலகவும், மருத்துவமனைக் கடமைகளுக்கு வெளியே திட்டமிடப்பட்ட நடமாடும் கிளினிக்குகள் உட்பட தொடர்புடைய பிற கடமை நடவடிக்கைகளில் இருந்து மறு அறிவிப்பு வரும் வரை விலகவும் அரசவைத்தியஅதிகாரிகள்சங்கம் தீர்மானித்துள்ளது.

அதேநேரம், முன்மொழியப்பட்ட தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதற்குஅதிகாரிகளின் போதியபதிலைக்கொடுக்காததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், நவம்பர் மாதம் முதலாம் திகதிக்கு பின்னர் மாகாண அளவிலான தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பிக்கத்திட்டமிட்டுள்ளதாகவும் அரசவைத்தியஅதிகாரிகள்சங்கம் அறிவித்துள்ளது. (05)




## யாழ். விமான நிலையத்தில் நவராத்திரி பூசை வழிபாடு

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை சரஸ்வதி பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. விமான நிலைய அதிகாரிகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த பூஜை வழிபாட்டில், விமான நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்கள், சுங்கத்துறையினர், விமான படையினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (05)

## நீதி கோரி நீதிமன்று சென்ற பெண் மீது கத்திக் குத்து

வழக்கு விசாரணையொன்றுக்காக நீதிமன்றத்துக்குச் சென்ற பெண்ணொருவர் மீது கத்திக்குத்துத் தாக்குதல் இடம்பெற்றுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஹோமாகம நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்த பெண்ணொருவர் மீதே குறித்து தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், இதன்போது தாக்குதல் மேற்கொண்ட நபர் அப்பெண்ணின்கழுத்தில்கூரியஆயுதத்தால் தாக்கிவிட்டுஓட்டோவில்தப்பிச்சென்றுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் படுகாயமடைந்த பெண் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார் எனவும், தப்பிச் சென்ற நபரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# நாட்டில் வீதி விபத்துகளில் உயிரிழக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டில்ஒவ்வொருஆண்டும் சுமார் 150 பாடசாலை மாணவர்கள் வீதி விபத்துகளில் உயிரிழக்கின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்து பொலிஸாரின் தரவுகளின்படி,நெடுஞ்சாலைகளில் ஏற்படும் வாகன விபத்துகளில் தினமும்6பேர்உயிரிழக்கின்றனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, ஒவ்வொரு 4 மணியத்தியாலங்களுக்கும் ஒருவர் உயிரிழக்கிறார் எனக் கூறப்படுகிறது.

கவனக்குறைவாக வாகனம் செலுத்துவதாலேயே இந்த விபத்துகள் அதிகம் ஏற்படுகின்றன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்த ஆண்டு ஒக்ரோபர்15ஆம்திகதிவரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துகளில் ஆயிரத்து 800 பேர் உயிரிழந்துள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதில் 18 வயதுக்குட்பட்ட 115 சிறுவர்கள் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர் எனப் போக்குவரத்து பொலிஸாரின் தரவுகள்மேலும்தெரிவிக்கின்றன. (05)



சி.வி.கே. சிவஞானம் தலைமையில் புதிய குழு
யாழ். அபிவிருத்தி குழு கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள எட்டுத் திட்டங்கள் தொடர்பில் ஆராயும் குழுவின் தலைவராக அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த திட்டங்களுக்கான காணிகளை வழங்க அனுமதி வழங்குவதற்கு முன்னர் அவை தொடர்பாக ஆராயவே சி.வி.கே. சிவஞானம் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த குழுவின் அறிக்கையை தாக்கல் செய்த பின்னர் காணிகளை ஒதுக்குவது குறித்து முடிவு செய்யப்படும் என மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. (05)



## மட்டக்களப்பில் தீப்பந்தங்களை ஏந்தி கவனவீர்ப்புப் போராட்டம்

மின்கட்டண உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, புதன்கிழமை மட்டக்களப்பு, கல்லடி பகுதியில் தீப்பந்தங்களை ஏந்தியவாறு கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டத்தில் கட்சியின் முக்கியஸ்தர்கள், பொது மக்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன் போது மின்சாரக்கட்டணத்தை குறைக்குமாறும், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டு மக்களை பாதுகாக்குமாறும் போராட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.(05)

# காலி கோட்டையை பார்வையிட கட்டணம்: கடும் எதிர்ப்பு தெரிவிக்கும் பொது மக்கள

இலங்கையில் சுற்றுலா பயணிகளை அதிகம் கவர்ந்த காலி கோட்டையைப் பார்வையிடுவதற்கு கட்;டணம் அறவிட காலி பாரம்பரிய அறக்கட்டளை மற்றும் மத்திய கலாசார நிதியம் என்பன தீர்மானித்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, காலி கோட்டையைப் பார்வையிட பிரவேசிக்கும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளிடம் 15 அமெரிக்க டொலரும், சிறுவர்களிடம்; 7 அமெரிக்க டொலரும் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானத்திற்கு பிரதேச வாசிகள் கடும் விசனத்தை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## பாடசாலை மாணவர்களுக்குப் போதை மாத்திரைகளை விநியோகித்தவர் கைது

அம்பாறையில்நீண்டகாலமாகபாடசாலை மாணவர்களுக்கு போதைமாத்திரைகளை விநியோகித்து வந்த நபரை காரைதீவு பிரதான வீதியில் வைத்து பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்தே இக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கைதுசெய்யப்பட்ட நபரிடம் இருந்து 500 போதைமாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# விநாயகபுரத்தில் ஆலயம் அமைக்க அம்பாறை மாவட்ட செயலர் அடிக்கல்





(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச செயலகத் தின் கீழ் உள்ள விநாயகபுரம் ரீ சித்தி விநாய கர் ஆலயத்துக்கான புதிய ஆலயம் அமைப்ப தற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு புதன்கிழமை இடம்பெற்றது. இவ் ஆன்மீக நிகழ்வில் அம்பாறை மாவட்டச் செயலர் சிந்தக அபேவிக்ரம வேட்டி சால்வை அணிந்து தமிழர் கலாசார உடையில் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார். அம்பாறை மாவட்ட மேலதிகச் செயலர் வேதநாயகம் ஜெகதீசன் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் எஸ்.ஜெயராஜ் திருக்கோவில் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் என்.நிசாந்தினி மற் றும் ஆலய தர்மகத்தாக்கள், பொதுமக்கள் என பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# சான்றிதழ் வழங்கும் விழா







(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பு கடந்த மூன்று ம ாத காலமாக நடத்திய பெண்கள் வலுவூட்டல் சார்ந்த சான்றிதழ் கற்கைநெறியின் சான்றிதழ் வழங்கும் விழா நேற்று காரை தீவில் சிறப்பாக நடைபெற்றது.

வலையமைப்பின் இணைப் பாளர் கலைவாணி தயாபரன் தலைமையில் காரைதீவு லேடி லங்கா மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தலைமை அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிகச் செயலர் வேதநாயகம் ஜெகதீசன் மற்றும் கௌரவ அதிதி யாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் டிஜே.அதிசயராஜ் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாகவும், வளவாளர்களாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்தி ய இணைப்பாளர் ஏசிஏ. அசீஸ்,உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, மாவட்ட இணைப் பாளர் இர்பான், உளவளத்துறை உத்தியோகத்தர் ரி.சுதர்சன், இணைப் பாளர் மொகமட் ா உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித் தார்கள். பயிற்சி நெறியை நிறைவு செய்த 40 மாண விகளுக்கான சான் றிதழ்கள் வழங்கப் பட்டது. கூடவே பிரதம அதிதியும் வளவாளர் களும் கௌரவிக் கப்பட்டார்கள்.

# நாவற்குழியில் நாளை இலவச மருத்துவ முகாம்

நாவற்குழி, 300 வீட்டுத்திட்டப்பகுதி யில் நாளை பகல் பொழுதில் இலவச மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது. சான்றோர் சனசமூக நிலையத்தில் காலை 9 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை இந்த மருத்துவ -முகாம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உடல்திணிவு சுட்டி மதிப்பீடு, குருதி குளுக்கோஸ் மட்டப் பரிசோதனை, கண் பரிசோதனை, வைத்தியர் பரிசோதனையும் ஆலோசனையும், மருந்து விநியோகம், சுகாதாரக் கல்வியூட்டல், உளவள ஆலோசனை, சிறு தானியங்கள் பற்றிய விழிப்பு ணர்வு ஆகிய சேவைகளை இந்த முகாமில் மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

யாழ்ப்பாண விஞ்ஞானச்சங்கமும் (மருத்துவ விஞ்ஞானப் பிரிவு) யாழ்ப்பாண நீரிழிவுச் சங்கம் மற்றும் நிறைவாழ்வு மையம் (இணுவில்) ஆகியன இணைந்து இந்த மருத்துவ முகாமை ஏற்பாடு செய்யதுள்ளன.

# மரம் அகற்றப்பட்டது

வீதியில் செல்வோருக்கு அச்சுறுத்த லாகக் காணப்பட்ட மரம் மின்சார சபையினரால் நேற்று அகற்றப்பட்டது.

வட்டக்கச்சி பிரதான வீதி ஊடாக இரணைமடு விமான நிலையம், இராம நாதபுரம், கல்மடு, ஊடாக தருமபுரம் போன்ற பிரதேசங்களுக்குச் செல்லும் மக்களுக்கு இந்த மரம் மிகவும் ஆபத்தாக காணப்பட்டதால் அகற்றப்பட்டதாக அதி காரிகள் தெரிவித்தனர். (113)

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.10.2023இல் வெளியிடப்பெற்றது.